நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



கர்த்தருக்குப் பாட்டெழுதிக் காதலுக்குப் பாட்டெழுதி
அர்த்தமுள்ள இந்துமதம் அதையும் அளந்தவனே!
தேனுர் கவியரசே! செட்டிமக்கள் செய்தவமே!
வானுலகை விட்டு வருவாய் இதுசமயம்

அக்டோபர் 1992

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 9

ஆங்கிரஸ
புரட்டாசி

அக்டோபர்
1992

ஆர்வல்லார் காண அரன் அவனை? அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் — சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சின் உள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து.

— காரைக்காலம்மையார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
நடராஜ் அண்ணுமலை

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணுபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00



கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை





கற்பக மூர்த்தி

அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பக மூர்த்தி தெய்வக்
களஞ்சியம் இருக்கை சென்று
பொற்பதம் பணிந்து பாரீர் !
பொய்யிலை ! கண்ட உண்மை !

பிள்ளையார் பட்டி என்னும்
பேரருட் சுரங்கத் தின்கண்
உள்ளவன்; மலையிற் பூத்த
உருவத்தன்; இயற்கைத் தோன்றல்;
தெள்ளிய மனத்தர்க் கெல்லாம்
திருவருள் வழங்கும் ஐயன்;
கள்ளமில் பக்தர் தந்தை
கற்பக மூர்த்தி அன்றோ !

— கவியரசர் கண்ணதாசன்

கண்ணதாசன் பற்றி வானதி !

நான் கல்லூரிக்கோ பல்கலைக் கழகத்திற்கோ போய் பாடம் கேட்டதில்லை. ஆனால் கவியரசு கண்ணதாசன் என்னும் பல்கலைக் கழகத்தின் முன் அமர்ந்து கேட்ட பல்வேறு பாடங்கள் காலகாலங் களுக்கும் நினைவைவிட்டு அகலா தவை. இன்ன துறை என்று இல் லாமல் சகல துறைகளிலும் அவருக்கிருந்த ஞானம் அபார மானது.

கவிஞர் தன்னுடைய வாழ் நாளில் முகமறியாமல் பலருக்கும் செய்த உதவிகள்தாம் கப்பலின் மாலுமியைப் போன்று இன்றைக் கும் அந்தக் குடும்பத்தைக் காத் துக் கொண்டிருக்கிறது என்பது என் எண்ணம்.

— வானதி திருநாவுக்கரசு

வானதி பற்றி கண்ணதாசன் !

என் வாழ்நாளில் 'ராயல்டி' என்ற பெயரில் நான் முதன் முத லில் பணம் வாங்கியது வானதி திருநாவுக்கரசுவிடம் மட்டுமே. மற்றவர்களெல்லாம் ஒரு சவரன், சாப்பிடுகிற பிளேட்டு என்று கொடுத்துவிட்டுப் போய்விடுவார் கள்.

நன்றி கெட்டவர்களையே பார்த்த எனக்குத் திருநாவுக்கரசு வின் அன்பும், நன்றியும், நாணய மும் இமயமலையளவு தோன்று கின்றன.

நல்ல மனைவி, கடுமையான உழைப்பு, நாணயம் இந்த மூன் றும் மத்திய அரசின் நூறு ஆண்டு வருமானத்தை விட அதிக மானவை.

— கண்ணதாசன்

"அண்ணன் என்னடா ... தம்பி என்னடா ..."

ஒருமுறை கவியரசர் கண்ண தாசனுக்கு தீபாவளி நேரத்தில் பணம் தேவைப்பட்டது. தன் அண்ணன் ஏஎல். சீனிவாசனைச் சந்தித்துத் தனக்குப் பத்தாயிரம் ரூபாய் அவசரமாக வேண்டு மெனக் கேட்டார் கவியரசர். அதற்கு அவரோ "போடா.. ! உனக்கு வேறு வேலையே இல்லை" என்று கூறி, தட்டிக் கழித்து விட்டார். கவியரசர் கவலையோடு



இருந்தார். அச்சமயம் கோவையி லிருந்து வந்திருந்த ஒரு படத் தயாரிப்பாளர் தன் படத்திற்குப் பாட்டெழுதித் தரும்படி கேட்டு கவியரசருக்கு முன் தொகையா கப் பணமும் கொடுத்தார். பாட் டெழுதினார் கவியரசர், "அண் ணன் என்னடா, தம்பி என்னடா அவசரமான உலகத்திலே..." என்று. ஆக ஏமாற்றத்திலேதான் தத்துவமே பிறக்கிறது !

- கவிஞர் சோம. சிவப்பிரகாசம்



இன்னும் கவிஞர் வாழ்கின்றார்

கவிஞர் சுப சுந்தரம்


கவித்திறம் இறைவன் கருணையில் கிடைப்பது
கடல்போல் அதிலே வளர்ந்தவர் யார்!
குவிந்திடும் கற்பனை குன்றெனத் தொடர்ந்திடக்
குவலயம் வியக்கச் சிறந்தவர் யார்!
சுவைபடப் பொருள்படச் சுகம்பெறும் கவிகள்
சுடச் சுடப் பற்பல சொன்னவர் யார்!
புவியர சாளும் கவியர சன்றி – தமிழ்
பூமியில் மற்றொரு வல்லவர் யார்!

உள்ளமும் வெண்மை, உடைகளும் வெண்மை
உருவமும் பொன்நிறச் சந்தனமாய்,
அள்ளிடும் பூக்கள் அர்ச்சனைத் தட்டில்
அமர்வன போல் விழி அஞ்சனமாய்
தெள்ளிய ஓடையில் தெளிவுறும் படமாய்
சிறு சிறு கவிகளை அற்புதமாய்,
வள்ளலைப் போலும் வழங்கிய தல்லால்
வாங்கிப் புகழ்பெற வந்ததில்லை!

கர்ப்பத் திருக்கும் காலம் தொடங்கி
கவன்மிகு ஞானம் கைவரவும்,
கற்சிலை வனப்பாய் காலம் கடந்து
காவியம் நூறு தான் தரவும்
அர்த்தம் நிறைந்த இந்து – மதம் தனை
அனைவரும் அறியப் பயன்படவும்,
நுட்பத் திறமை வாய்த்த தல்லால் – ஒரு
நொடியிலும் உண்மையை மறைத்த தில்லை!

ஆண்டுகள் ஆயிரம் ஆன பின் னாலும்
அழகிய நிலவுக்கு மாற்றமில்லை!
மாண்டவர் பெயர் உடன் மறையு மென்றாலவர்
வாழ்ந்ததில் யார்க்கும் லாபமில்லை!
ஆண்டவன் படைப்பில் கோடியில் ஒருவர்
அணையா விளக்காய் ஒளி தரலாம்!
மீண்டும் புகழ்வளர் மேதினி யாவிலும்
மேதகு கவிஞர் வாழ்கின்றார்!

கோவிலூர் சுவாமிகளின் பிறந்த தின விழா



கடவுளை நேரிடையாகப் பார்க்க முடியவில்லை என்றாலும் குருவை வணங்கி இறைவனின் அருளை நாம் பெறலாம் வாழ்க்கையில் நாம் அனுபவிக்கின்ற இன்ப - துன்பம் அனைத்துமே நிலையானது அல்ல. அவற்றை நமக்குப் புரிய வைப்பவர், குருவைத் தவிர வேறு யாரும் இல்லை அந்தக் குருவின் ஆசியைப் பெறுவது நமது வாழ்க்கைக்கு மிக மிக அவசியமான ஒன்றாகும். குருவின் பிறந்த நாளை நாம் கொண்டாடும்போது நாம் நன்றி உணர்ச்சியுடன் அவரது செயல்களை நினைவு கூர்வதற்கு அது ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தப் பெறுகிறது.

நகரத்தார் குருபீடமான கோவிலூர் மடாலயத்தில், கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவதிரு காசி விஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் அவர்களின் பிறந்த தின விழா 5-9-1992 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 6 மணியளவில் குரு பாத பூஜை தொடங்கியது. பின் பக்தர்கள் பக்தியுடன் பஜனை பாடினார்கள். பாத பூஜையில் பயன்படுத்திய நாணயங்களை குரு மகா சந்நிதானம் அவர்கள் பிரசாதமாக அனைவருக்கும் வழங்கினார்கள்.

காலை 10 மணியளவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆசியுரை வழங்க, அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் திரு. கே. நாகப்பன் விழாவினைத் தொடங்கி வைத்தார். திரு. செல்வகணேசன் இறைவணக்கம், சக்தி வணக்கம் பாடினார்.

பின்னர் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. திருவாளர்கள் இராம. வீரப்பன், அரு. சுந்தரம், தெ. முருகசுவாமி கா. நாகப்பன், மீனவன், முனைவர் சபா. அருணசலம், முனைவர் ஜவகர்லால் ஆகியோர் கவிபாடி மகிழ்வித்தனர்.

பள்ளத்தூர் திரு. சுப. அருணாசலம் ''அனுபவமே அறிவின் உண்மைகள்'' என்ற தலைப்பில் சிந்தனை உரை நிகழ்த்தினர். பின்னர் மகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கினர்கள்.


இவ்விழாவில் துலாவூர் ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளும் திருவாரூர் சந்நிதானம் அவர்களும் கலந்து கொண்டனர். பூம்புகார் திரு. ராஜசேகரன், திரு. பழ. கருப்பையா, திரு. பெரியபெருமாள் ஆகியோர் உரையாற்றினர்.

— பிரம்மச்சாரி அத்யாத்ம சைதன்யா

கோவிலூர் மடாலயம்

திருமணம்

அலவாக்கோட்டை திரு. சி. அரு. சின. வெங்கடாசலம் செட்டியார் புதல்வன் செல்வன் சுந்தரேசன் என்கிற வள்ளியப்பன் M. B. A. வுக்கும் சொக்கலிங்கம் புதூர் திரு. சு. வீர. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி செல்வி வள்ளியம்மை என்கிற சாந்தி B. Sc. க்கும் காரைக்குடியில் 3-9-92 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அப்போது கவிஞர் திரு. சிவல்புரி சிங்காரம் தொகுத்த 'மண விழா மலர்' முன்னாள் மத்திய வணிகத் துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களால் வெளியிடப் பெற்றது.



புதுக்கோட்டை மாவட்ட கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றம் சார்பில் அண்மையில் புதுக்கோட்டையில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் கண்ணதாசன் படத்தை தமிழக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். இரகுபதி திறந்து வைத்தார்கள். அருகே மாநிலத் தலைவர் திரு. வி. என். சிடி., பொதுச் செயலாளர் திரு. அரு. நாகப்பன், புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் திரு. சி. அழகப்பன்.

உமையாள் முத்துவும் சாந்தி முத்துவும்!

குழந்தைகளுக்குத் தாய்ப் பால் கொடுத்து வளர்ப்பது வழக்கம். நாகரிகம் வளர வளர புட்டிப் பால் புகட்டும் வழக்கம் பெருகி வருகிறது. திருஞான சம்பந்தருக்கு, பார்வதி ஞானப் பால் கொடுத்து வளர்த்ததாகப் புராணம் கூறுகிறது. செல்வி சாந்தி முத்துவுக்கு திருமதி உமையாள் முத்து தமிழை ஊட்டி வளர்த்தார்கள். அதனுல் தான் தன்னுடைய தாய்க்குச் சமமாக அவர் மேடைகளில் அமர்ந்து பட்டிமன்றங்களில் வாதிடுகிருர். சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பாக எங்கள் ஊரில் நாங்கள் இலக்கிய விழாக் கொண்டாடியபோது திருமதி உமையாள் முத்துவை அழைத்துப் பேசச் சொன்னேம். அப்போது கைக் குழந்தையாக இருந்த சாந்தி முத்துவை எங்கள் வீட்டில் தொட்டிலில் போட்டுவிட்டு எங்கள் வீட்டிற்கு எதிரே அமைக்கப் பெற்றிருந்த மேடையிலிருந்து அவர் இலக்கியம் பேச, அந்த இலக்கியப் பேச்சைக் கேட்டுக் கொண்டே குழந்தை தூங்கி விட்டது. அப்படிக் குழந்தைப் பருவத்திலிருந்தே தமிழும் இலக்கியமும் கேட்டு வளர்ந்ததால்தான் சாந்தி முத்து தன்னுடைய தாய்க்கு நிகராக இலக்கிய மேடைகளில் அமர்ந்து வாதிடும் திறமை பெற்றிருக்கிருர்.

ஒரு காலத்தில் பண்டித மோதிலால் நேருவின் மகன் ஜவஹர்லால் நேரு என்று கூறியபோது அது உலகிற்குத் தெரிந்தது. பின்னர் ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு என்று கூறுகிற அளவிற்கு நேரு பெருமகனுர் வளர்ச்சி பெற்றிருந்தார். அதேபோல உமையாள் முத்துவின் மகள் சாந்தி முத்து என்று கூறிய காலம் போய் சாந்தி முத்துவின் தாய் உமையாள் முத்து என்று கூறுகிற அளவிற்கு காலம் வர, வளர்ச்சி பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(குருவிக்கொண்டான்பட்டி அருள்மிகு சொக்கலிங்கம் மீனுட்சி அம்மன் ஆலய திருக்குட நீராட்டை ஒட்டி 2-9-92 இரவு நடைபெற்ற பட்டிமண்டபத் தொடக்கவுரையில்.)



எனது ஆலய அனுபவங்கள்

வி.என். சிதம்பரம்

— 16 —

ஆடி வீதியில் திருக்கல்யாணம்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம், அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தாரால கட்டிக் கொடுக்கப்பெற்ற திருக்கல்யாண மண்டபத்தில் 200 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. இம்மண்டபத்தில் சுமார் ஆயிரம் பேர் மட்டுமே கண்டு களிக்க முடியும் அன்றைய நிலையில் அவ்விடம் போதுமானதாக இருந்தது. இந்நிலையை மாற்றி இலட்சக்கணக்கான பக்தர்கள் திருக்கல்யாணத்தைக் கண்டு களிக்க ஏற்பாடு செய்திட வேண்டுமென்று எண்ணி பலரிடம் ஆலோசனை கேட்டேன். இறுதியில் ஆலயத்தின் வாயில் காக்கும் காவலர் ஒருவர் ''திருக்கல்யாணத்தை ஆடி வீதியில் நடத்தலாம்'' என என்னிடம் யோசனை கூறினார். அவரது கருத்தை மனதிற்கொண்டு ஆகம விதிகளின்படி ஆடிவீதியில் திருமணம் நடத்தலாமா என ஆலயத்தின் சிவாச்சாரியார்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் ''தாராளமாக நடத்தலாம்'' எனக் கூறினர். எல்லாவற்றிற்கும் மேலாக காஞ்சிப் பெரியவர், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், தருமை ஆதீனம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோரிடம் ஆலோசனை கேட்டேன். அவர்கள் அனைவரும் இசைவு தெரிவித்து ஆசீர்வதித்தார்கள். அவர்களது ஆசியுடன் திருக்கல்யாணத்தை இலட்சக்கணக்கான மக்கள் காணும் பொருட்டு ஆடி வீதியில் பெரிய மேடை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தேன் அப்போது ஒரு தரப்பினரிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

அவர்களது ஆதரவையும் பெறும் பொருட்டு அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம். அதற்கு அவர்கள் ஆடி வீதியில்- அதாவது தெருவில் நடத்தக் கூடாது எனக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவர்களது எதிர்ப்பிற்கு விளக்கம் தரும்வகையில் ''எப்படி மனிதனுக்குக் கண் முக்கியமோ அதே போன்று கால் விரலும் மனிதனுக்கு அவசியமே. மதில் சுவற்றிற்குள்

இருக்குமிடமெல்லாம் அன்னை மீனாட்சி குடிகொண்டிருக்கின்ற இடம்தான்'' என்று கூறினோம். அதற்கு அவர்கள் ''நூற்றி ஐம்பது ஆண்டுக் காலமாக திருமணம் நடந்து வருகின்ற இடத்தை இடநெருக்கடி காரணமாக ஆடிவீதிக்கு மாற்றுகிறீர்கள். இந்த இடமும் போதவில்லையென்றால் தமுக்கம் மைதானத்திற்கு மாற்றுவீர்களா''? எனக் கேட்டனர். அதற்கு நாங்கள் ''மன்னர் திருமலைநாயக்கர்



தமுக்கம் மைதானத்தை உள்ளடக்கி மதிற்சுவரை எழுப்பியிருந்தால் அங்கும் கொண்டு செல்வோம். சித்திரை வீதிக்கும் ஆடி வீதிக்குமிடேயே மதிற்சுவரை எழுப்பியிருக்கின்ற காரணத்தினால் அந்த எல்லையை எக்காரணம் கொண்டும் தாண்ட மாட்டோம்'' என்று கூறினோம். அதன் பிறகு அவர்கள் 'சூரிய ஒளி படும்படி திருமணத்தை நடத்தக்கூடாது' என்று புதுப் பிரச்னையை கிளப்பினார்கள். அதற்கு நாங்கள் ''சூரிய ஒளிபடாத வண்ணம் பந்தல் போட்டிருக்கின்றோம். அடுத்தாண்டு திருமண மண்டபம் கட்டி விடுவோம்'' எனக் கூறினோம். ''சூரிய ஒளி பட்டாலும் தவறில்லை; காரணம் சூரியனை பகவானாக வணங்குவது இந்து மதத்தில்தான்'' என்று கூறினோம். ''பாண்டிய மன்னர் காலத்தில் ஆண்டிற்கு ஓரிரு நாட்கள் காலையில் சூரிய ஒளி அன்னை மீனாட்சி அம்மன்மீது படும்படி அமைத்திருந்தார்கள். இன்று பலவிதமான மாடிக்கட்டிடங்கள் ஆலயத்தைச் சுற்றிலும் வந்து விட்ட காரணத்தால் அக்காட்சியை நம்மால் காணமுடியவில்லை'' என்று கூறினோம். அவர்கள் சமாதானம் அடையவில்லை. மாறாக திருக்கல்யாணப் பந்தலுக்கு தீ வைத்து விடுவதாக மறைமுகமாக மிரட்டினார்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் மேற்கண்ட நிகழ்ச்சிகள் குறித்து புகார் கொடுத்து ''நான் கோவிலில் போய் படுத்துக்கொள்கிறேன்'' என்று முறையிட்டேன். அதற்கு அவர் 'உங்களுக்கு ஏன் வீண் சிரமம். நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறி அனுப்பினார். விடிந்தால் திருக்கல்யாணம். நள்ளிரவு 12-00 மணிக்கு நான் ஆலயத்திற்குச் சென்றேன். ஆயிரக்கணக்கான போலீஸ்காரர்கள் குவிக்கப்பட்டு அனைவரும் பந்தலில் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு வியப்புடன் திரும்பினேன். மறுநாள் திருக்கல்யாணம் சிறப்புடன் நடைபெற்றது. இலட்சக்கணக்கான பக்தர்கள் அதனைக் கண்டு களித்து பக்திக் கடலில் நீந்தினர்.

திருக்கல்யாணம் முடிந்து பக்தர்கள் தரிசித்துக் கொண்டிருந்த பொழுது அப்பக்தர்களில் ஒருவரின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்து கொண்டிருந்தது. நான் அவரருகே சென்று "ஏனையா அழுகிறீர்கள்?" என்றுகேட்டேன், அதற்கு அந்த பக்தர் "இதுவரை நான் மனிதர்களின் திருமணத்தைப் பார்த்திருக்கிறேன். இப்போதுதான் தெய்வத் திருமணத்தைப் பார்த்தேன். எனவே என்னையறியாது உணர்ச்சி வசப்பட்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன்'' எனக் கூறினார். சில வற்றைச் சொல்லி உணர வைக்க முடியாது. பார்த்து அனுபவித்து அவர்களாகவே உணர்வு கொள்ள வேண்டும். திருமணம் முடிந்ததும் அந்த இடத்தைச் சுற்றி பக்தர்கள் வலம்வந்து அக்னி குண்டத்திலிருந்து திருநீறை எடுத்துப் பூசிக் கொண்டார்கள். இராமன் இருக்குமிடம் அயோத்தி என்பார்கள். அயோத்தியால் இராமபிரானுக்குச் சிறப்பில்லை. இராமபிரானல் அயோத்திக்குச் சிறப்பு. : அதுபோல அன்னை மீனாட்சி திருக்கல்யாணம் நடந்த இடம் திருத்தலமாக வழிபடக்கூடிய இடமாக மாறியது. திருமணம் முடிந்த மறுநாள் எதிர்ப்புத் தெரிவித்தவர்களேஎன்னை நேரில் சந்தித்து ஆண்டுதோறும் இதே இடத்தில் திருக்கல்யாணம் நடக்க வேண்டுமென்று வாழ்த்துக்கூறி ஆதரவு அளிப்பதாகவும் கூறினர்கள்.

திருக்கல்யாணம் முடிந்த மறுநாள் காவல்துறைகண்காணிப்பாளரை நேரில் சந்தித்து நன்றி கூறினேன். அதற்கு அவர் ''தங்களுக்குத்தான் நான் நன்றி கூற வேண்டும்'' என்ருர். 'சித்திரைத் திருவிழாபாதுகாப்பிற்காக வருகை தந்த ஆயிரக்கணக்கான காவலர்களைஎங்கு தங்கவைப்பது?' என்று எண்ணிக்கொண்டிருந்தபோது தாங்கள் தங்கள் பிரச்னையைக் கூறினீர்கள். உங்கள் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் பொருட்டு எனது பிரச்னையைத் தீர்த்துக்கொண்டேன்'' என்ருர். ஆக அன்னை மீனாட்சி அம்மையின் திருக்கல்யாணம் சிறப்புடன் நடந்தேறியது எனக் கூறி இருவரும் மகிழ்ந்தோம். அடுத்தாண்டு கான் கிரீட்டால் நிரந்தர திருமண மேடை அமைக்கப்பெற்று, திருக்கல்யாணம் மேலும் சிறப்பாக நடந்தேறியது.

(வளரும்)

கவியரசர் பாரதியும் கவியரசு கண்ணதாசனும்

டாக்டர் சரசுவதி இராமநாதன், பள்ளத்தூர்

இருபதாம் நூற்றுண்டில் இரு கவியரசர்களைக் கண்டுள்ளது தமிழகம். புத்துலகச் சிற்பியான, வரகவி பாரதி ஒருவர்; திரையுலகக் கம்பனுன கண்ணதாசன் மற்ருெருவர். பாரதி போட்ட(க)விதை, பலரிடத்தும் பரவி, பலதுறைகளில் பரிணமித்தது; பரிமளித்தது புரட்சி - பாவேந்தரிடமும். தெய்விகம், காந்தியம் இவை நாமக்கல் கவிஞரிடமும், எளிமைப் பண்பு கவிமணியிடமும், பொதுவுடைமை பட்டுக்கோட்டையிடமும், சேர்ந்து கொண்டன. காதல், கண்ணன் பக்தி, பல்சுவை, விரிந்த பார்வை, அனைத்துமே நம் கவியரசர் கண்ணதாசனைச் சேர்ந்தன எனலாம்.

பல்கலைக்கழகம்

பாரதியோ, கண்ணதாசனே வாழ்ந்த காலத்தில் எந்தப் பல்கலைக் கழகமும் அவர்களை இனம் கண்டு கொள்ளவில்லை. ஆனல் அவர்களே பல்கலைக்கழகங்கள் என்பது உண்மை: வெறும் புகழ்ச்சியில்லை. இருவரும் கதை, கவிதை, கட்டுரை, மொழி பெயர்ப்பு, பத்திரிகைத் தமிழ், கீர்த்தனை, சிறுகாப்பியம் என்று பல துறைகளிலும் புலமைத் திறம் காட்டியவர்கள். பாரதியார் வாழ்ந்த காலத்தில் திரைப்படப் பாடலாசிரியராகத் திகழவில்லை. அவரது மறைவுக்குப்பின், அவரது பாடல்கள் திரைப் பாடல்களாக வந்தன ஆனல் கண்ணதாசனே திரைப் பாடலாசிரியராகவே புகழ் பெற்ருர்

கண்ணனுக்கே புகழ்

இருவருமே இராமனை அதிகம் பாடவில்லை. பாரதி 'சாகா வரமருள்வாய் ராமா' என்ற பாடல் பாடினர். சில இடங்களில் இராமன் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். கண்ணதாசனும், 'இராமன் எத்தனை இராமனடி'' என்ற அற்புதமான பாடலைப் பாடியிருக்கிருரே தவிர ஜானகி, மைதிலி, சீதை என்று சீதாதேவியைப் போற்றிய அளவுக்கு இராமனைப் புகழ்ந்து பாடவில்லை. கண்ணனையே தனக்கு எல்லாமாகக் கொண்டவர்கள் இருவரும். ''அன்று ஒரு பாரதம் ஆக்கவந்த'' கண்ணனல்தான், இன்றைய பாரதத்தை வழிநடத்தி, விடுதலை பெற்றுத்தர முடியும் என்று பாரதி நம்பினர்; கண்ணன் பாட்டுப் பாடினர். லீலைகள் செய்யும் மாயக் கண்ணனை அந்தியிலும் சந்தியிலும், அர்த்த சாம நேரத்திலும் தொழுதார் கண்ணதாசன். கிருஷ்ணகாந்தன் பாமாலை, 'கிருஷ்ண கானம்' பாடினர்.

நூறு வயது வாழ ஆசை

பாரதி தனக்கு என்று எதையும் கேட்காமல்,
'என் பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்'
'இவ்வையகம் பயனுற வேண்டும்' என்றெல்லாம் வேண்டியவர்
ஓரிடத்தில் —

''எனக்கு வேண்டும் வரங்கள் இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்தில் சலனமில்லாமல், மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின் மவுன நிலை வந்திட,
நீ செயல் வேண்டும்
கனக்கும் செல்வம் நூறுவயதிவையும் தரநீ கடவையே!''
என்று கேட்டார்.

கண்ணதாசனும் இவரை வழிமொழிந்து,
''நூறு வயதாகும்வரை ஓடிவிளையாட ஒரு நோயிலா
உடலம் வேண்டும்.
நுண்ணறிவு ஊறி இள வெண்ணிலவு போல ஒரு
நூலை நான் எழுத வேண்டும்.
பண்ணிசையில் என் தமிழைப் பால் போல் தெளித்து நான்
பரமார்த்தனாக வேண்டும்.
பத்தியொடு நின்னடியைப் பற்றி இவை கேட்கிறேன்.
பாரதச் சக்தி உமையே!''
என்று வேண்டினார்.


''வேண்டும் - வேண்டும்''

''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்—'' என்ற அருட்பாவில்
வள்ளல் பெருமான் என்னென்ன ''வேண்டும்'' என்றார்.
பாரதியும்,

'' மனத்தில் உறுதிவேண்டும் - வாக்கினிலே இனிமை வேண்டும்.
நினைவு நல்லது வேண்டும் - நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்.
கனவு மெய்ப்பட வேண்டும் - கைவசமாவது விரைவில் வேண்டும்.
தனமும் இன்பமும் வேண்டும் — தரணியிலே பெருமை வேண்டும்''
என்று மிக மிக உயர்ந்தவைகள் 'வேண்டும்' என்றார்.

பாரதியின் வழிவந்த கவியரசர் கண்ணதாசனும் 'வேண்டும்
வேண்டும்' என்றார்.

''குன்றென நிற்றல் வேண்டும் - குடையெனப் பணிதல் வேண்டும்
மன்றினில் உயர்தல் வேண்டும் - மனத்தினில் அமைதி வேண்டும்.
நன்றென நினைப்பதெல்லாம் — நடத்திடும் துணிவு வேண்டும்
அன்றெனில் உலகை விட்டே — அக்கணம் அகல்தல் வேண்டும்.
முறையுள செல்வம் வேண்டும் — முனிவிலா நண்பர் வேண்டும்.
நிறையுள மனையாள் வேண்டும் - நிகரிலாக் குழந்தை வேண்டும்.
கறையிலாப் புகழும் வேண்டும் - கலக்கமில் உடலும் வேண்டும்.



சேலத்தில் 15-9-1977 முதல் 29-9-1977 வரை கோவில், கலாசார, கலை, புத்தகக் கண்காட்சி மாநாடு நடைபெற்றது. அப்போது கவியரசர் கண்ணதாசனுக்கு காஞ்சி காமகோடி பீடாதிபதி சத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆசி கூறி பிரசாதம் வழங்கிய அற்புதமான காட்சி.

படம் உதவி : திரு. என். வயிரவன், இராயவரம்

பெறும் இவை இல்லை என்றால் பேருலகடைதல் வேண்டும். ''

எவ்வளவு திண்ணமான, தீர்மானமான 'வேண்டுதல்' !

தொழில் - கவிதை

பாரதியைப் பார்த்து 'உமக்கு என்ன தொழில்? ' என்று வினவிய போது,

நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக் குழைத்தல்.
இமைப் பொழுதும் சோராதிருத்தல்'' என்று நிமிர்வுடன் பதில் கூறினாராம்.

''கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பவன்''
''மானுடர் இனத்தை ஆட்டிவைப்பேன் – அவர்
மாண்டுவிட்டால் அதைப் பாடி வைப்பேன் - நான்
நிரந்தரமானவன் அழிவதில்லை. எந்த
நிலையிலும் எனக்கு மரணம் இல்லை''

என்று தனக்கு அறிமுகம், தானே செய்து கொண்டவர் கவியரசர் கண்ணதாசன்.

சமத்துவம்

பொதுவுடைமை சித்தாந்தமும், சமத்துவமும், சமரச சன்மார்க்கமும் பாரதிக்கு உயிர்மூச்சு.

''நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு'' எனவும்,

''எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்திய மக்கள் - நாம்
எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலே
எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' - இது பாரதியின்

சமத்துவ முரசு.

காவியத்தாயின் இளைய மகன், கம்பனுக்கு மூத்தமகன் கண்ணதாசன். கம்பன், பாரதி இவர்கள்கண்ட இலட்சிய சமுதாயம் காண இவரும் அறைகூவல் விடுக்கிறார்.

''எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலைவேண்டும்.
வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை''

நதிநீர் தேசியமயமாக்கப் பெறவேண்டுமென்று பாரதி தீர்க்க தரிசனத்தில் கூறினார்.

''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்''

இதை வெறும் கவிதை; கவிஞரின் கற்பனை என்றிருந்து விட்டோம். செயலாக்கியிருந்தால், 'நதிநீர்தாவா' எதற்கு? பாரதியின் வரிகளில் உள்ளம் தோய்ந்த கவிமன்னன் கண்ணதாசனே'

'கங்கை நதியைத் திருப்பி இழுத்துக்
காவிரிவரை கொணர்வோம் - முகவைக்
காடுவரை கொணர்வோம் – சேதுக்
கால்வாய் தனில் விடுவோம்.
அத்தகு கால்வாய் நாட்டில் பிறந்திட
எத்தனை பேர் வருவீர் - வேர்வை
எத்தனை பேர் இடுவீர் - ரத்தம்
எத்தனை பேர் தருவீர்? 'எனக் கேட்கிறார்.

பதில் சொல்லுங்கள் !

அக்டோபர் மாதம் கண்ணதாசன் அமரரான திங்கள். சிறுகூடல் பட்டி தந்த சிங்கார முத்தையா சிக்காகோ நகரினிலே இறைவ னிடம் சேர்ந்துவிட்டார் வாழ்ந்த காலம் கொஞ்சமாயினும், அவர் புகழோ என்றும் நிற்கும். அவர் நிரந்தரமானவர், அழிவ தில்லை. ''நகரத்தார் இனம்தந்த நல்முத்து அவர். அவரது குரலை, ''நகரத்தார் குர'' லுக்காக, பாரதியின் குரலோடு இணைத்துப் பார்த்தேன். ரசித்தேன். மகிழ்ந்தேன். மடல் தந்தேன். ஆம் கவியரசர்கள் கவிதைகள் என்றும் தேன்; தேன் !



திருச்சி நகரத்தார் சங்க வெள்ளி விழாக் கவியரங்கில் (26-8-74 அன்று) கவியரசர் கண்ணதாசனுக்கு முனைவர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் பாடிய தலைவர் வணக்கம்.

மலைவாழை முன்னாலே இலைவாழை வணங்குகிறேன்
கலைவாழை என விளங்கும் கவியரசர் நம் நாட்டில்
நிலைவாழை ஆகி நெஞ்சாரக் கவிசொரிய
மலைவாழை முருகனிடம் மனுப்போட்டுத் தொடங்குகிறேன்.
செட்டி மகனே! செட்டறியாக் கவிமகனே!
கட்டி மகனே கண்கவரும் மணமகனே!
ஆச்சி மகனே! ஆட்சிக்கே அயல் மகனே!
பேச்சும் கவியாகப் பேசும் கவிமகனே!
கம்பன் மறுபிறப்பே! கன்னித் தமிழ்த்தாயின்

தெம்பை உலகறியத் தென்னாட்டிற் பிறந்தவனே!
இதய மலர்க் கோப்பையிலே எண்ணாமல் பொங்கிவரும்
உதய மலர் அத்தனையும் உயிர்மலராய் உதிர்ப்பவனே!
முடிதழுவா மன்னரெல்லாம் முன் வணங்கிப் பாராட்டக்
குடிதழுவிக் கோலோச்சும் கோமகனே! வணங்குகிறேன்.
காலத்துக் கேற்றபடி கார்மேகம் தோற்றபடி
ஞாலத்துக் கேற்றதனை நாளும் உரைப்பவனே!
சூழும் புவியனைத்தும் சுண்டுவிரல் விளிம்பிலென
ஆளும் கவிதையினால் அடக்கும் திறமிருந்தும்
வாழும் வகையதனை வகுக்கின்ற நேரத்தில்
பாழான நான்முகனும் பானையினை நினைத்தானோ?
உன்னைப் படைக்கையிலே உள்ளுருகிக் கள்வடிக்கும்
தென்னை மரத்தைத் தெரியாமல் நினைத்தானோ?
மூர்த்தியென உன்னை முன்னாலே படைத்ததனால்
தீர்த்தத்தில் உன்னைத் தினமுழுக விட்டானோ?
தோசி மதுவுக்குத் தோள்கடுத்துப் போனவுடன்
ஊசி மருந்தின்மேல் உள்ளாசைப் படுகிறதோ?
பாசத்தின் பெட்டகமே! பைந்தமிழைப் பாடுமுடல்



கொப்பனுபட்டி திரு. எஸ்பி. தியாகராஜன் செட்டியார் புதல்வன் செல்வன் வெங்கடேஷ் B,Com. க்கும் பொன். புதுப்பட்டி திரு. எஸ்பி. எம். வேலாயுதம் செட்டியார் புதல்வி செல்வி உமா B A. க்கும் பொன். புதுப்பட்டியில் 3-9-92 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுடன் மணமகனின் பெற்றோரும் திரு. வி. என். சிதம்பரம் செட்டியாரும் உள்ளனர்.

வாசத்தைக் கடைப்பொருள்கள் வசமாக்க விடலாமோ?
கரையாத கல்லும் கனிவிக்கும் உன்னுடலைக்
கறையானரம் மதுவுக்குக் கரும்பாக விடலாமா?
அன்னை விசாலாட்சி அளித்த தமிழ்மேனி
தொன்னைச் சருகா? தூளாக்கும் புகையிலையா?
ஆடி விளையாடும் அங்காடிப் பம்பரமா?
காடி மதுவூறும் கலமென்று நினைத்தாயா?
மானாகக் கேட்பவரை மதிமயக்கும் கவிதையுடல்
போனால் கிடைத்திடுமா? புதுமேனி வாய்த்திடுமா?
''என்மேனி'' என்றே இனிமேலே எண்ணாதே
உன்மேனி பொன்மேனி உலகப் பொதுமேனி
வீட்டுடமை மேனியெனில் விருப்பம் போல் செய்திடலாம்
நாட்டுடமை என்பதனால் நகம் படவும் சம்மதியோம்
யார்கேட்க நீயென்ற அடியேனை அடித்தாலும்
தார் போட்டுப் பாராட்டித் தமிழுன்னைக் கேட்பதனால்
உன்னிடத்திற் சொல்லி ஒருபயனும் காணாமல்
மண்ணிடத்தில் நீயும் மறையாமல் வாழ்ந்துவரக்
கல்லுக்கும் அருள் கொடுத்துக் காப்பாற்றும் முருகனிடம்
மல்லுக்கு நின்று மன்றாடிக் கேட்கின்றேன்.
பாடப் பிறந்தவனைப் பாட்டுக் கலையோடு
கூடப் பிறந்தனைக் கொஞ்சுதமிழ் தவம்செய்து



மேற்படி திருமணத்தில் மணமக்களுடன் தொழிலதிபர் கொப்பனாபட்டி திரு. மு. ப. மு. ராம. சேதுராமன் செட்டியாரும் அவரது துணைவியார் திருமதி ருக்மணி ஆச்சியும் மணமகனின் தாயார் திருமதி ஏகம்மை தியாகராஜனும் உள்ளனர்.

தேடப் பிறந்தவனைச் செந்தமிழாம் பூஞ்சுனையில்
ஆடப் பிறந்தவனை அனைவருமே பாராட்டிக்
கண்ணனுக்குத் தாசனென கைகூப்பும் நாயகனை
என்னைப் பறித்தேனும் இவ்வுலகில் வாழவிடக்
கந்தா ! முருகா ! கவிக்காசைப் படுபவனே !
செந்தா மரைபோன்ற செம்மேனிக் கவியரசன்
பாகாம் கவிதையினைப் பாரென்றும் கேட்டுவக்கச்
சாகா வரமவற்குத் தா.

கண்ணதாசன் பற்றி ஜெயகாந்தன்

நானும் கவிஞர் கண்ண தாசனும் நெருக்கமான நண்பர்கள். எங்களுக்குள் எட்டு வயது வித்தியாசம் உண்டு.

நான் அவரைப் பற்றி நண்பர்களிடம் பேசுவேன் அவர் என்னைப் பற்றிப் பலரிடமும் பேசுவார். நான் பேசியது அவரை எட்டும். அவர் பேசியது எனக்குக் கிடைக்கும். இருந்தாலும் நாங்கள் சந்திக்கிறபோது அவையெல்லாம் ஒதுங்கிப்போய் நட்பு மட்டுமே நிற்கும்.

அவர் கவிதைகளைப் படித்து நான் மலைத்துப் போவேன். என் எழுத்துக்களைப் பார்த்து அவர் மலைத்துப் போவார்.

இன்று புற்றீசல் போல் பலரும் எழுதலாம் இனியும்எழுதலாம். ஆனால் தமிழுக்கென்று ஒரு தனிச் சிறப்பு-இலக்கியப் பின்னணி உண்டல்லவா? அந்தப் படுதாவை உயர்த்திப் பிடித்தவர் அவர். விசுவரூபம் எடுத்து நின்றவர். அவருக்குத் தலைநரைக்க, நரைக்க தமிழ் சிறக்கும்.

நான் அவரிடம் ''நீங்கள் வெறும் கண்ணதாசன் தான்; ஆனால் நானே கண்ணன்'' என்பேன். அவர் ''காலிப் பயல்கள் எல்லாம் கண்ணன் தான்'' என்பார். அவரை ஏமாற்றாத ஒரே மனிதன் நான்தான்.

அவர்தான் எல்லோருக்கும் நண்பர். அவருக்குத் தான் ஒரு நண்பரும் இல்லை.


என் படங்களில் பாடல்கள் இருக்காது. இருந்தால் அது அவருடைய பாடல்களாக இருக்கும். இல்லையென்றால் என் பாடல்களாக இருக்கும். பாடல்களுக்கு நான் அவருக்குப் பணம் கொடுக்க மாட்டேன். வேளாளன், செட்டிக்குப் பணம் தருவதா? அப்படித்தான் நான் அவரிடம் சொல்வேன் !

பாடல்களிலே அவர், தான் செட்டி என்பதைக் காட்டியிருக்கிறார். 'வாழ்க்கை என்பது போராட்டம்' என நாம் சொல்வோம். அவர் 'வரவு' என்கிறார். மரணம் அவருக்குச் 'செலவு'.

செட்டிகள் ஏமாறவே மாட்டார்கள். ஏமாந்த செட்டி ஒருவர் உண்டென்றால் அது கண்ணதாசன் மட்டுமே !

— ஜெயகாந்தன்

(கவியரசரின் 58 ஆவது – பிறந்தநாள் விழாவில் கூறியது)



2-9-92 அன்று திருக்குட நீராட்டுச் செய்யப் பெற்ற சிங்கப்பூர் ஸ்ரீ ருத்ர காளியம்மன் திருக்கோவிலின் முகப்புத் தோற்றம்.

சிங்கப்பூர் ஸ்ரீ ருத்ர காளியம்மன் திருக்கோவிலில் புதிதாக ஸ்ரீ சிவ சக்தி சன்னதி ஏற்படுத்தப் பெற்று, திருப்பணி செய்யப் பெற்று 2-9-92 அன்று திருக்குட நன்னீராட்டுச் சிறப்பாக நடை பெற்றது. அக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவரும் தேவ கோட்டையைச் சேர்ந்தவருமான-சிங்கப்பூர் நேஷனல் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் ஆர். கருணாநிதி அவர்கள் ஸ்ரீ சிவ சக்தி சன்னதி ஏற்படுத்த பெரும் தொகை நன்கொடையாக வழங்கி யிருக்கிறார்கள்.

குட நீராட்டு முடிந்ததும் சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்திற்கு இந்த ஆலயத்திலிருந்து 10 ஆயிரம் வெள்ளி நன்கொடையாக வழங்கப்பெற்றது.



சிங்கப்பூர் ஸ்ரீ ருத்ரகாளியம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவரும் சிங்கப்பூர் நேஷனல் பல்கலைக் கழகப் பேராசிரியருமான முனைவர் திரு. ஆர். கருணாநிதியும் அவருடைய துணைவியார் திருமதி அலமேலு ஆச்சியும் தெரிசிக்கும் காட்சி

உங்கள் குரல்

''நகரத்தார் குரல்'' முன் அட்டையில் அறிவு சான்ற பெரியவர்களின் ஒளிப் படங்களை வெளியிட்டு வருவது சாலச் சிறந்ததாகும். அடுத்தடுத்து வரக் கூடிய இதழ்கள் ஒன்றில் மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் படத்தை வெளியிட்டால் நல்லதென்று நினைக்கிறேன்.

— கலைமகள் நடராஜன்
மதுரை

செப்'92 இதழ் கண்டேன். ஆடிட்டர் திரு. சித. அண்ணாமலை செட்டியார், முனைவர் திரு. கே என். கே. எஸ். கே. சொக்கலிங்கம் பற்றிய கட்டுரைகளும் பேராசிரியர் இராம. சேதுநாராயணன் அவர்கள் எழுதிய 'இன்றையத் தேவை' கட்டுரையும் மிக அருமை. 'வேலை தேடுபவர்களாக இருக்காதீர்கள். வேலை உருவாக்குபவர்களாக இருங்கள்' என இளைஞர்களுக்கு அவர்கள் கூறும் அறிவுரை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

கா. முருகப்பன்
நெய்வேலி

ஆடிட்டர் ஒக்கூர் திரு. சித. அண்ணாமலை செட்டியார், நாட்டரசன் கோட்டை திரு. கே என். கே. எஸ். கே. சொக்கலிங்கம் பற்றி செப்' 92 இதழில் வெளிவந்திருப்பது அத்தனையும் உண்மை. உள்ளது உள்ளபடி எழுதிய உங்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இதுபோல் நம்மினத்துச் சான்றோர்களின் அருமை பெருமைகளை ஒவ்வொரு இதழிலும் விடாது பிரசுரிக்க வேண்டுகிறேன்.

அரு. கண்ணப்பன்
கீழப்பூங்குடி

''நகரத்தார் குரல்'' செப்'92 இதழில் 'இன்றையத் தேவை' என்ற தலைப்பில் பேராசிரியர் இராம. சேதுநாராயணன் அவர்கள் எழுதிய கட்டுரை மிகவும் பயனுள்ளது. நம்மினத்துச் செல்வந்தர்கள், கல்வியாளர்கள், சமூக அமைப்புகள் ஒன்று கூடி செயலில் இறங்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டதை அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். நாம் எல்லோரும் உயர்வு தாழ்வின்றி ஒற்றுமையாகச் செயல்பட்டால் ஆர் எம். எஸ். அவர்களின் கருத்துக்களை எளிதில் நிறைவேற்றலாம்.

வயி. சொ. அருணாசலம்,
கீழப்பூங்குடி

தண்ணார் குரலில் தமிழ்க்கடல் கண்டேன்
தமிழில் நனைந்தேன் அமிழ்தம் குடித்தேன்
வெண்ணீறு அணிந்த தோற்றம் கண்டேன்
வெவ்வினை அகலும் மாற்றம் உணர்ந்தேன்
எண்ணியே இது போல் பற்பல படங்கள்தான்
இடமே பெற்றிட வாழ்த்துகின்றேன்

— புலவர் மாமணி மா. முத்துராமன்
பள்ளத்தூர்.

இராம. முத்துப்பழநியப்ப செட்டியார்

திரு. இராம. முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்கள் ஆண்டவனுக்குத் தொண்டு செய்வதையும் மக்களுக்குச் சேவை செய்வதையும் தம் வாழ்வின் முக்கிய நோக்கங்களாகக் கொண்டு செயலாற்றி வருகிருர்கள். பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த இவர்களது பூர்வீகம், சக்தியாகும். பின்னர் சிலகாலம் சோழபுரத்தில் வாழ்ந்த இவர்கள், இப்போது அருள்மிகு புல்வாய் நாயகி அம்மன் கோவில் கொண்டுள்ள சரித்திரப் புகழ் வாய்ந்த பாகனேரியில் வாழ்ந்து வருகிருர்கள்.

1939ல் கோவையிலும் 1942ல் மதுரையிலும் நூல் வணிகத்தைத் தொடங்கி சிறப்பாக நடத்தி வரும் இவர்கள் 1979 முதல் மங்கையர்க்கரசி நுற்பாலையையும் நடத்தி வருகிருர்கள்.

தெய்வபக்தி மிக்க இவர்கள் நல்ல காரியங்கள் எங்கு நடைபெற்ருலும் அவற்றைப் பாராட்டுவதுடன் மனமுவந்து கொடையளிப்பதிலும் வள்ளலாகத் திகழ்கிருர்கள்.

திருக்குட நன்னீராட்டு விழாக்கள் எங்கு நடைபெற்ருலும் அங்கு இவர்கள் ஓதுவார்களை தம் செலவில் அனுப்பி உதவி வருகிருர்கள். இதுவரை



சுமார் 125 திருக்கோவில்கள் அந்த உதவியைப் பெற்றுள்ளன. இந்தப் பணியைச் செய்ய 'தமிழ்க் கடல்' இராய. சொ.. போன்ரேர் தம்மை ஊக்குவித்தனர் என்கிருர்கள்.

இவர்கள் செய்துள்ள, செய்து வரும் தர்ம காரியங்கள் எண்ணில டங்கா. திருக்கோவில்கள், மருத் துவமனைகள் போன்ற வற்றிற்கு ஆழ் துளைக் கிணறு (Bore well) அமைத்துக் கொடுத்துள்ளார்கள். வசதியற்ற, வசதிக் குறைவான குழந்தைகளின் கல்விக்கும் உதவி வருகிறார்கள்.

இவர்களது மணிவிழா 1974ல் சிறப்பாக நிகழ்ந்தது. 1989ல் பவள விழாவும் நடை பெற்றது.

இலங்கை யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த சுவாமிநாத தம்பி ரான் சுவாமிகள் இவர்களுக்குத் 'திருமுறைக் காவலர்' என்கிற பட்டத்தை வழங்கியுள்ளார்கள். மதுரை நகரத்தார் பக்தி நெறி மன்றத்தின் புரவலரான இவர் கள் அம்மன்றத்தின் முதலாம் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் பெற்றார்கள்.

பாகனேரி நகரச் சிவன் கோவிலின் திருப்பணிக் குழுத் தலைவராக இருந்து குடநீராட்டு சிறப்புற நடைபெறத் தொண் டாற்றியதுடன் அதற்குப் பெரும் தொகை நன்கொடையாகவும் வழங்கினார்கள்.

இவர்களது இறைத் தொண் டைப் பாராட்டும் விதமாக துலாவூர் ஆதீனம் இவர்களுக்கு 12-10-92 அன்று நிகழவிருக்கிற குருபூஜை விழாவில் 'அறமனச் செம்மல்' என்ற விருதை வழங்கிக் கௌரவிக்க இருக்கிறது.

திரு. முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்களின் நற் பணிகள், தொண்டுகள் சிறக்க வாழ்த்துவோம்.

— எல். சுந்தரம்



குருவிக்கொண்டான்பட்டி சொக்கலிங்கம் — மீனாட்சி அம்மன் திருக்கோவிலின் குடநீராட்டு விழாவில் கோவிலூர் சுவாமிகள், துலாவூர் சுவாமிகள் திரு. அ. மு. சித. முத்தையா செட்டியார், திரு. பழ. கி. சீனிச் செட்டியார், திரு. மு. தியாகு என்ற பழநியப்பன்

பாகனேரி செல்வ விநாயகர் கோவில் குடநீராட்டு விழா

பாகனேரி சேந்தூரணி அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலின்திருக்குட நன்னீராட்டு விழா 11–9–92 காலை சிறப்பாக நிகழ்ந்தது.

குட நீராட்டையொட்டி நான்கு காலம் யாகசாலைப் பூஜைகளும் தேவாரம் பாராயணமும் நடைபெற்றன.

10–9–92 மாலை மேளக் கச்சேரியும் டாக்டர் வாசு கணபதி அவர்கள் நடுவர் பொறுப்பேற்க பட்டிமண்டபமும் இரவு கீதாலயா இசைக் குழுவினரின் திரைப்பட இன்னிசையும் நிகழ்ந்தன.

குட நீராட்டு முடிந்தவுடன் பாகனேரி நகரத்தார், நாட்டார், பொதுமக்கள் அனைவரும், தம் சொந்தச் செலவில் திருப்பணி செய்து குட நீராட்டு விழாவைச் சிறப்புடன் நடத்திய பாகனேரி திரு. சுப. வே. மாணிக்கம் செட்டியார் அவரது புதல்வன் திரு. மா. தியாகராஜன், பேரன் ராம. சுப்பிரமணியன் ஆகியோருக்குப் பரிவட்டம் கட்டி பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

குட நீராட்டு விழாவை திரு. வே. வேலாயுதம் செட்டியார் திரு. பெரி. அழ. மு. நா. நாராயணன் செட்டியார், திரு. சிவ. கண்ணப்ப செட்டியார் ஆகியோர் முன்னின்று நடத்தி வைத்தனர்.

குடநீராட்டு விழாவிற்கு வருகைதந்த அனைவருக்கும் மூன்று தினங்கள் விருந்தளிக்கப் பெற்றது.

தஞ்சையில் ஸ்ரீ சித்தி விநாயகர் குட நீராட்டு விழா

தஞ்சாவூர் கமலா சுப்பிரமணியம் மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் புதிதாக நிறுவப் பெற்றுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 9-9-92 அதிகாலை சிறப்பாக நிகழ்ந்தது.

இராங்கியத்தைச் சேர்ந்தவரும் தஞ்சாவூர் லெட்சுமி சீவல் தொழிற்சாலையின் நிறு



நா. அ. சுப்பிரமணியன் செட்டியார்

வனருமான திரு நா. அ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தஞ்சாவூரில் பெரும் பொருட் செலவில் கமலா சுப்பிரமணியம் மேல்நிலைப்பள்ளியை நிறுவி சிறப்பாக நிர்வகித்து வருகிறார்கள். இப்போது அவ்வளாகத்தில் இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோவிலை அமைத்து குட நீராட்டும் செய்துள்ளார்கள்.

குடநீராட்டு முடிந்ததும் தஞ்சை வாழ் நகரத்தார்கள் சுவாமிக்குப் பட்டுச் சாத்தினர்கள். பல பொதுமக்கள் சுப. அவர்களுக்கும் அவரது துணைவியாருக்கும் மாலை, பொன்னுடை அணிவித்தார்கள்.

நேமங்கோவில் நகரத்தார் சார்பாக திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திரு. என். வி. எஸ்டி. சிதம்பரம் செட்டியார் திரு. கும. நா. சுப. நா. நாகப்ப செட்டியார், உ. மு. சுப. லெ. அழகப்ப செட்டியார், உ. மு. சுப. லெ. சுப்பிரமணியன் செட்டியார், தேவகோட்டை பெரிய லெட்சுமணன் செட்டியார் ஆகியோர் ஒரு பிள்ளையார் படத்தை சுப. அவர்களுக்கு வழங்கி பொன்னுடை போர்த்தி, மாலை அணிவித்துச் சிறப்பித்தார்கள்.

புதிய நிர்வாகிகள் தேர்வு

தேவகோட்டை நகரத்தார் இளைஞர் முன்னேற்ற சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 13-9-92 அன்று நகரச் சிவன் கோவிலில் தலைவர் திரு. அழ. முருகப்பன் தலைமையில் நடைபெற்றது. அப்போது 1992-93 ஆம் ஆண்டிற்கு திரு. சுப இராமநாதன் தலைவராகவும் திரு. மா. ஏகப்பன், திரு. சித. சிதம்பரம் இருவரும் துணைத் தலைவர்களாகவும் திரு. ஏ. பழநியப்பன் செயலாளராகவும் திரு. நா. இராமநாதன் இணைச் செயலாளராகவும் திரு. சி. வீர. இராமநாதன் பொருளாளராகவும் மற்றும் பதினொரு பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஏகமனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர். செயலாளர் திரு. ஏ. பழநியப்பன் நன்றி கூறினர்.



உன்பேரைத் தினம்பாடும் குயிலல்லவா?

கவிஞர் சிவல்புரி சிங்காரம்
(கண்ணதாச தாசன்)

'சாத்தப்பா' பெற்றெடுத்த தங்கம்! நாளும்
சாற்றும்'பா' தந்ததொரு சிங்கம்! வாழ்வில்
ஆத்தாளாய் 'விசாலாட்சி' வாய்த்த தாலே
அன்புமனம் விசாலமென விரியப் பெற்ருய்!
போற்றி நின்ருய் 'மலையரசி'! எனவே நாளும்
புகழ்தந்தாள் 'கலையரசி'! அதனுல் உன்னை
கூற்றுவனும் தமிழ்கேட்க அழைத்துச் சென்ருன்!
குவலயத்தில் இனித்தமிழை யார்தான் காப்பார்?

பொய்யதனைப் பேனுவில் நிரப்பு கின்ற
புலவர்கட்கு மத்தியிலே, நீமட் டும்தான்
'மை'யதனைப் பேனுவில் நிரப்பி வைத்து
மனம்மகிழக் கவி தந்தாய்! போற்றுகின்ருேம்!
வையகத்தில் வாழ்ந்திருந்த வாழ்க்கை எல்லாம்
'வனவாசம்' என்றே நீ எழுதி வைத்தாய்!
கையகல இதயத்தில் இடம்பிடித்தாய்!
கவியாலே அஞ்சலியை வழங்கு கின்ருேம்!

எது 'கை'க்குக் கிடைத்தாலும் அதையே இங்கு
எழுத்தாளர் ஏட்டினிலே எழுது வார்கள்!
எது 'கை'க்கு வந்தாலும், அதுவே நல்ல
'எதுகை' யென உனக்கு மட்டும் வாய்த்த தன்ருே?
மது'கை'யில் இருந்தாலும், இலையென் ருலும்
மக்களுக்குத் தரும்கவியில் போதை சேரும்!
பதிவாகும் இசைத் தட்டாய் நாட்டில் வாழும்
பாமரர்கள் நாவெல்லாம் மாறும் அன்ருே?

திருமணம்

நேமத்தான்பட்டி திரு. கரு. சடையப்ப செட்டியார் பேரனும் திரு. இராமகிருஷ்ணன் செட்டியார் புதல்வனுமான செல்வன் சடையப்பன் B com. க்கும் பள்ளத்தூர் திரு. இராம முத்தையா செட்டியாரின் புதல்வி செல்வி வள்ளிக்கண்ணு B. com க்கும் சென்னை ராணி மெய்யம்மை மன்றத்தில் 9-9-92 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை திரைப்பட இசையமைப்பாளர் திரு. கங்கை அமரன் குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெற்றது.

சந்தங்கள் அத்தனையும் சொந்தம் என்ருய் !
சுவாமிகளின் தத்துவத்தை எடுத்து ரைத்தாய் !
சிந்தனையால் திரைப்படத்தைச் சிலிர்க்க வைத்தாய் !
திருஏசு காவியமும் உலகிற் கீந்தாய் !
மந்திரிமார் அரசரெல்லாம் போற்றும் வண்ணம்
'மாங்கனியும்' இந்துமத மாண்பும் சொன்னுய் !
சொந்தங்கள் அத்தனையும் அலற விட்டு
சொல்லாமல் கொள்ளாமல் எங்கே சென்ருய் ?

நீயின்றித் திரைஉலகம் மாறிப் போச்சு !
நிழல்கூட நிஜமென்று தேறிப் போச்சு !
பூவின்றி வாசம்மட்டும் பிறக்க லாச்சு !
பொன்னுக்கும் பொருளுக்கும் பாடலாச்சு !
வாயினின்று வரும்சொல்லே கவிதை யாச்சு !
வளர்தமிழில் கொச்சைச்சொல் கூட லாச்சு !
தாயோடு தாரத்தைச் சேர்த்து வைத்தே
தமிழ்ப் படத்தைப் பார்க்கும்நிலை மாறிப் போச்சு !

விக்கலுக்குப் பாட்டெழுதி வெற்றி கண்ட
வேந்தன் நீ ! இன்றுதிரை உலகில் வாழ்வோர்
முக்கலுக்கும் முனகலுக்கும் பாட்டுத் தந்தே
மோகத்தை வளர்க்கின்ருர் ! நியாயம் தானு ?
சிக்கலுக்கு ஆளாகும் கவிஞர் கட்குள்
சிறப்பாக வாழ்ந்தவன் நீ ! அதனுல் தானே
தக்கவிதம் 'கவியரசர்' பட்டம் பெற்ருய் !
தமிழ்த்தாயின் தவப்புதல்வன் ஆகி நின்ருய் !

உன்பேரைத் தினம்பாடும் குயிலாய் வந்தேன் !
உலகத்தில் நானும்ஒரு கவிஞ ஞனேன் !
என்பேரைத் தினம்பாட வழிவ குத்த
எழிலான கவியரசே ! உனைவ ணங்கிப்
பொன்போல செந்தமிழைப் போற்றிக் காப்பேன் !
புதுயுகத்தில் உன்பேரை நிலைக்க வைப்பேன் !
மன்பதையில் நிரந்தரமாய் வாழ்பவன் நீ !
மறுபடியும் எப்போது பிறப்பா யப்பா !

தஞ்சையில் விநாயகர் சதுர்த்தி விழா

தஞ்சாவூர் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்திலிருந்து 7 அடி உயரமுள்ள விநாயகர் சிலை 31-8-92 அன்று அலங்கரிக்கப் பெற்ற ரதத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பெற்று கரந்தை வடவாற்றில் கரைக்கப் பெற்றது. இவ்விழாவில் திரு. ஏ. சுப்பிரமணியன் செட்டியார் நக. சங்கத் தலைவர் திரு. என். மெய்யப்ப செட்டியார் மற்றும் திரளான நகரத்தார்கள் கலந்து கொண்டனர்.

சிறுகூடல்பட்டி சிட்டழகு

சென்னை அரசினர் மேனிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்து வரும் செல்வி சிட்டழகு புதுக்கோட்டை கம்பன் விழா நிகழ்ச்சிகளில் பேச்சுப் போட்டி, பாட்டுப்போட்டி ஆகியவற்றில் தொடர்ந்து பரிசுகள் பெற்று பள்ளிக்கு சுழற் கேடயத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளார். அண்மையில் சென்னையில் நடைபெற்ற வ. சுப. மாணிக்கனார் நினைவுப் பேச்சுப் போட்டியில் பங்கேற்றுப் பரிசு பெற்றுள்ளார்.



அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, பெருந்தலைவர் காமராசரின் 90 ஆவது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவ மாணவிகளுக்காகச் சென்னை சத்திய மூர்த்திபவனில் நடத்திய பேச்சுப் போட்டியில் ''பெருந்தலைவர் காமராசர் வளரும் செல்வங்களுக்கு வழங்கிய செல்வங்கள்'' என்னும் தலைப்பில் பேசி முதல் பரிசாக ரூ. 1500/- பெற்றார் (இப்பரிசினை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் வாழப்பாடி திரு. இராமமூர்த்தி வழங்கினார்).

ஏவி. எம். அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வென்று உவமைக் கவிஞர் திரு. சுரதாவிடமிருந்து சுடற்கேடயத்தைப் பெற்றுப் பள்ளிக்குப் பெருமை சேர்த்தார்.

சிறுகூடல்பட்டி திரு. கரு. சி. பழ. சுப. லெட்சுமணன் செட்டியார் திருமதி காந்திமதி ஆச்சியின் புதல்வியான இவர், கவிஞர் திரு. சிவல்புரி சிங்காரத்தின் சகோதரி மகளாவார்

தந்தையின் தூண்டுதலும் அம்மான் திரு. சிங்காரம் அளித்த ஊக்கமும் கவியரசர் கண்ணதாசன் பிறந்த மண்ணில் (சிறுகூடல்பட்டி) தான் பிறந்த பெருமையும் தனது வளர்ச்சிக்குக் காரணம் என்கிறார் செல்வி சிட்டழகு.

அவருக்கு நமது நல் வாழ்த்துக்கள்.

அரிமழத்தில் இலவச மருத்துவ முகாம்

அரிமழம் தே. முரு. உமையாள் ஆச்சி நினைவு இலவச மருத்துவ முகாம் அரிமழம் தொடக்கப் பள்ளியில் 13-9-92 அன்று நடைபெற்றது. முகாமில் பல்வேறு நோய்களுக்குச் சிறப்பு மருத்துவர்களும் பொது மருத்துவரும் சிகிச்சை அளித்தார்கள். 205 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். இது 7-ஆவது மாதாந்தர இலவச மருத்துவ முகாமாகும்.


"குருவிக்கொண்டான்பட்டி நகரத்தார்கள் எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள்"

இறைவன் உள்ளத்திலும் இருக்கிறுன்; கோவில் உள்ளே யும் இருக்கிறுன். இறைவனே உள்ளத்தில் காண்பவர்கள் கோவில் உள்ளேயும் காண்பார் கள்.

''உள்ளத்தில் உள்ளானடி அது நீ உணர வேண்டுமடி; உள்ளத்தில் காண்பாயெனில் கோவில் உள்ளேயும் காண்பா யடி'' என்று பாடியவர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளே. அவருக்கு மன்றம் ஏற்படுத்தித் தமிழ் வளர்த்து வரும் இடம் குருவிக்கொண்டான்பட்டி. இங்கே மீனுட்சி சொக்கலிங்கத் திற்குக் குடநீராட்டு இன்று நிகழ்கிறது. கலே அழகும் சிலே அழகும் கொண்ட திருக்கோவில் இது. இந்தக் குடநீராட்டு விழா வைக் காணக்கூடிய பேறு நமக் குக் கிடைத்திருக்கிறது.

வீட்டில் 64 குடங்களில் தீர்த் தம் வைத்து மணி விழா நாளில் அபிஷேகம் செய்து கொள்கிறேம். அது 'சாந்தி' எனக் கூறப்பெறு கிறது. அதுபோல இறைவன் திருக்கோவிலில் மந்திரங்கள் முழங்க, திருமுறைகள் ஒலிக்க, குடநீராட்டு விழாவைக் காண்கி றேம். இதைப் 'பெருஞ் சாந்தி' என்று திருஞான சம்பந்தர் பாடு கிருர்.

மைலாப்பூரில் சிவனேசச் செட்டியார் மகள் பூம்பாவை பாம்பு கடித்து இறந்து போய்



குருவிக்கொண்டான்பட்டி அருள்மிகு சொக்கலிங்கம் - மீனுட்சி அம்மன் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்ற போது (2-9-92) எடுத்த படம்.



குருவிக்கொண்டான்பட்டி குடநீராட்டு விழாவில் தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களும் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. அ. மு. சித. முத்தையா செட்டியார் அவர்களும்.

விடுகிருள். திருஞானசம்பந்தருக்கு உரியவள் அவள், என்று வளர்த்தவர் சிவனேசச் செட்டியார். இறந்தவளின் சாம்பலைக் குடத்தில் வைத்திருந்தார். திருஞானசம்பந்தர் வந்தார். சாம்பலைப் பார்த்தார். ''பெருஞ் சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்'' (திருக்குட நீராட்டு விழாவைக் காணுமல் இறந்து போகலாமா?) என்று சம்பந்தர் பாடியதும் பூம்பாவை உயிருடன் எழுந்து வந்தாள் என்கிறது பெரிய புராணம்!

''ஒரு ஆலயக் குடநீராட்டு விழாவினைக் கண்டால் ஓராண்டு அந்த ஆலயத்திற்குச் சென்று வழிபட்ட பலன் கிடைக்கும்'' என்று வணக்கத்திற்குரிய வாரியார் சுவாமிகள் கூறியிருக்கிருர்கள்.

நகரத்தார்கள் காசி முதல் கன்னியாகுமரிவரை ஆலயங்கள், அன்ன சத்திரங்கள், பாடசாலைகள், கல்விக் கூடங்கள், பசுமடங்கள் ஏற்படுத்தியதோடு கடல் கடந்தும் ஆலயங்களைக் கட்டி ஆன்மீகத்தைப் பெருக்கினுர்கள். சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்கள். 96 ஊர் நகரத்தார்களும் சிறப்புக்குரியவர்கள் என்ருலும் ஒற்றுமைக்கு, எளிமைக்கு, அன்பிற்கு, பாசத்திற்கு, விருந்தோம்பலுக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர்கள் குருவிக்கொண்டான்பட்டி நகரத்தார் பெருமக்கள். அதனுல்தான் எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம்.

திருச்செந்தூர் கந்தர் சஷ்டி விழாவில் கூடிய கூட்டத்தைப் பார்த்து ''தலையா இது கடல் அலையா'' என்று கவியரசர் கண்ணதாசன் பாடினார். இன்று அவர் இருந்திருந்தால் ''செட்டிநாட்டுக்குள் குருவிக்கொண்டான்பட்டி இருக்கிறதா? குருவிக்கொண்டான் பட்டிக்குள் செட்டி நாடே இருக்கிறதா?'' என்று கவி பாடியிருப்பார். அந்த அளவிற்கு இங்கு பக்தர்கள் கூட்டம் இருக்கிறது.

இந்த விழாவில் கலந்து கொண்டு ஆண்டவனின் அருளைப் பெற, தமிழக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களும் தவத்திரு கோவிலூர் சுவாமிகள், தவத்திரு துலாவூர் சுவாமிகள் ஆகியோரும் வந்திருக்கிறார்கள்.

'முருகு' என்றால் 'அழகு' என்று பொருள். அப்படி முருகப் பெருமானைப் போல அழகோடு, இளமையோடு, திறமையோடு திகழ்கிற அமைச்சர் நமது ரகுபதி அவர்கள்.

இந்தக் குடநீராட்டு விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று அமைச்சர் மாண்புமிகு ரகுபதி அவர்களிடம் குடநீராட்டு விழாக் குழுத் தலைவர் அ. மு. சித. முத்தையா செட்டியார் அவர்களும் காரியக்காரர் பழ. கி. பழநியப்ப செட்டியார் அவர்களும் குருவிக்கொண்டான் பட்டி நகரத்தார் சார்பாகக் கேட்டுக்கொண்டபோது அமைச்சர் அவர்கள் வருவதாக ஒப்புதல் தெரிவித்தார்கள். ''அன்று பல குட நீராட்டு விழாக்கள் நடைபெற உள்ளனவே; நேரத்திற்கு



குருவிக்கொண்டான்பட்டி அருள்மிகு சொக்கலிங்கம் - மீனாட்சி அம்மன் கோவிலின் குட நீராட்டையொட்டி நடைபெற்ற யாக சாலைக்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை திரு. அ. மு. சித. முத்தையா செட்டியாரும் நடப்புக் காரியக்காரர் திரு. பழ. கி. சீனிச் செட்டியாரும் அழைத்து வந்த காட்சி.

வர வேண்டுமே'' என்று மீண்டும் கேட்டபோது ''என்னுடைய தொகுதியிலே நடைபெறுகின்ற நல்ல காரியத்திற்கு நிச்சயம் வந்து கலந்து கொள்வேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினார்கள். அதன்படி வந்து கலந்து கொண்டு சிறப்புச் செய்திருக்கிறார்கள்.


கி. பி. 2004ல் மீண்டும் குருவிக்கொண்டான்பட்டி நகரத்தார்கள் இந்த ஆலயத்திற்குக் குட நீராட்டுச் செய்வார்கள். அப்போதும் ரகுபதி அவர்கள் அமைச்சராக வந்து கலந்து கொள்ள வேண்டும். 'என்னுடைய தொகுதி' என்று உரிமையோடு அவர்கள் கூறியபிறகு நாங்கள் வர்ணனை செய்யலாமா? ஆகவே அமைச்சர் அவர்கள் வர்ணனை செய்வார்கள்.

- வி.என். சிதம்பரம் செட்டியார்

(குருவிக்கொண்டான்பட்டி அருள்மிகு சொக்கலிங்கம்- மீனாட்சி அம்மன் ஆலய திருக்குட நீராட்டு விழாவில் நேர்முக வர்ணனை செய்தபோது)

வருஷாபிஷேகம்

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு கரிகால சோழீஸ்வரர் உடனுய சிவகாமி அம்மன் திருக்கோவிலின் 7 ஆவது ஆண்டு வருஷாபிஷேக விழா 14-9-92 திங்களன்று சிறப்பாக நிகழ்ந்தது.



சுழற்குழுவின் சிறந்த தலைவருக்கான விருது பெற்ற திரு. எஸ்பி. இராமசாமி அமர்ந்திருக்கிறார். மற்றவர்கள் (இ—வ) சுழற் குழுவின் முன்னாள் ஆளுநர் திரு. ஆர். ரத்தினம், சங்கத் தலைவர் திரு. பி. ஜே. ஷா. திரு. சந்திர மௌலி, திரு. மணி முதலியார், டாக்டர் ஆர். சுப்பிரமணியம்.

திருநெல்வேலி மேற்கு சுழற்குழுவின் தலைவராக 1991-92 ஆம் ஆண்டில் அரும்பணியாற்றிய திரு. எஸ்பி. இராமசாமிக்கு சுழற் குழுவின் 3210 மாவட்ட ஆளுநர் திரு. மணி முதலியார் அண்மை யில் சிவகாசியில் நடைபெற்ற மாவட்டக் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் மிகச் சிறந்த சங்கத்தலைவருக்கான விருது வழங்கிக் கௌரவித்தார்.

திரு. எஸ்.பி. இராமசாமி திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் தலைவராக இருந்து சிறந்த தொண்டாற்றியவர். காரைக்குடி ஆத் தங்குடியார் வீட்டு சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் புதல் வரான இவர் திருநெல்வேலியில் ஆலைத் துணி வணிகம் செய்து வருகிறார்.

குருபூஜை

மதுரை ஸ்ரீலஸ்ரீ குட்டைய சுவாமிகள் மடாலயத்தில் 11-9-92 வெள்ளி முற்பகல் தவத் திரு குட்டைய சுவாமிகளின் 120 ஆவது ஆண்டு குருபூஜை சிறப் பாக நடந்தேறியது.

இக்குருபூஜையில் தவத்திரு சிவானந்த சுவாமிகள், திரு வாரூர் தெட்சிணாமூர்த்தி சுவாமி கள், திருவண்ணாமலை சாந் தானந்த சுவாமிகள் சென்னை நித்தியானந்தகிரி சுவாமிகள், பிரமானந்தமடம் யோகானந்த கிரி சுவாமிகள் திருவாளர்கள் ஏ எல். ஏ ஆர். காசிராஜா செட்டியார் ஏ எல். ஏ ஆர். எஸ் எம். நாராயணன் செட்டி யார் திரு. உல. சுப. உலகப்பன் திரு. கே ஆர். பழநியப்பன் போன்றவர்கள் கலந்து கொண் டார்கள்.

'பொற்கிழிக் கவிஞர்' கா. நாகப்பன்

திருப்புத்தூர் (பசும்பொன் மாவட்டம்) திருத்தளிநாதர் திருக்கோவிலின் திருக்குட நன்னீ ராட்டு விழாவினை யொட்டி திருப் புத்தூர் தமிழ்ச் சங்கம் 23-8-92 அன்று ஒரு கவிதைப் போட்டியை நடத்தியது. 21 கவிஞர்கள் பங்கு பெற்ற இதில் கவிஞர் திரு. கா. நாகப்பன் தேர்வு செய்யப் பெற்றார்.

முதற் பரிசான ரூ. 1001/- ஐயும் 'பொற்கிழிக் கவிஞர்' என்ற பட்டத்தினையும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திரு. நாகப்பனுக்கு வழங் கினார்கள்.

கவிஞர் திரு. கா. நாகப்பன் காரைக்குடியில் பிறந்தவர். நேமங் கோவிலைச் சேர்ந்தவர். M.A., B. Ed. படித்தவர். கிருங் காக் கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி யாற்றி வருகிறார்.

இவர் காஞ்சிப் பெரியவரிடம் பொங்கல் விழாக் கவிதைப் போட் டியில் ஆறுதல் பரிசு பெற்றவர். பல கவியரங்கங்கள், இலக்கிய விழாக்களில் பங்கு பெற்று வரு கிறார். காரைக்குடி நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றத்தின் உறுப்பினர்.

திரு. கா. நாகப்பனுக்கு நமது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



திரு. கா. நாகப்பன் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர் களிடமிருந்து 'பொற்கிழி' பெறும் இனிய காட்சி.



கோயம்புத்தூர் நகரத்தார் சங்கத்தின் சார்பில் 28-8-92 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் தமிழக அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களுக்குச் சங்கத் தலைவர் திரு. SE. SV. நாராயணன் பொன்னாடை அணிவிக்கும் காட்சி. அருகே விழாத் தலைவர் திரு. வி. என். சிடி. இருக்கிறார்.

காதில் விழுந்தவை

காசி முதல் இராமேஸ்வரம் வரை தான, தர்மம் செய்த நம்மினத்திற்கு 1947 முதல் எந்த அரசும் மதிப்பளித்து அமைச்சர் பதவி அளிக்கவில்லை. புரட்சித் தலைவி அரசுதான் மதித்தது; அமைச்சர் பதவி அளித்தது.

துணை வேந்தர் நாகப்பன் அவர்களுக்கு ஆண்டவன் ஒரு கம்ப்யூட்டர் மூளையையே வைத்து அனுப்பியிருக்கிறான். லால்பகதூர் சாஸ்திரி அவர்களைப்போல நாகப்பன் அவர்கள் எளிமையாக வாழ்பவர்கள்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

ஒரு மனிதன் பாராட்டப் பட வேண்டுமானால் அவன் ஐந்து விதமான வழிகளில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும். 1. ஒழுக்கம் 2. கொள்கைப் பிடிப்பு 3. செயல் திறமை 4. தன்னலமற்ற தன்மை 5 எல்லோரிடமும் எளிமையாகப் பழகும் குணம். இந்த ஐந்து தகுதிகளையும் வேந்தர் மாண்புமிகு ரகுபதி அவர்களும் துணைவேந்தர் திரு நாகப்பன் அவர்களும் பெற்றிருக்கிறார்கள்.

பதவிக்கும் உதவிக்கும் ஒரு எழுத்து வித்தியாசம். பதவியில் இருப்பவர்கள் பிறருக்கு உதவி செய்ய ஆசைப்பட வேண்டும். உதவி செய்ய ஆசைப்படுபவர்கள் பதவியில் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் உதவும் குணம் படைத்த உயர்ந்த மனிதர் மாண்புமிகு ரகுபதி அவர்கள் தொழிலாளர் நலத் துறை அமைச்சராகப் பொறுப் பேற்றிருப்பது நாம் செய்த தவப் பயனாகும்.

— கவிஞர் சிவல்புரி சிங்காரம்

(கோவை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 28-8-92 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்)


காகங்களும் அமைச்சரும்!

டில்லியில் அக்பர் அரசாட்சி செய்தபோது பீர்பால் என்பவர் அமைச்சராக இருந்தார். ஒரு நாள் "டில்லியில் எத்தனை காகங்கள் இருக்கின்றன?" என்று அக்பர், அமைச்சரிடம் கேட்டார். அமைச்சர் பீர்பால் "26444 காகங்கள் இருக்கின்றன" என உடனடியாகப் பதில் சொன்னார். பக்கத்தில் இருந்தவர் பீர்பாலிடம் "அக்பர் எண்ணிப் பார்த்து எண்ணிக்கை கூடுதல் அல்லது குறைவாக இருந்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். "குறைவாக இருந்தால் நம் நாட்டுக் காகங்கள் வேற்று நாடுகளுக்கு விருந்துக்குச் சென்றுள்ளதாகக் கூறுவேன். கூடுதலாக இருந்தால் வேற்று நாட்டுக் காகங்கள் நம் நாட்டுக்கு விருந்துக்கு வந்துள்ளதாகக் கூறுவேன்" என்றார் அமைச்சர்.

அப்படி அமைச்சராக இருப்பவர்கள் பேச்சுத் திறமை மிக்கவர்களாக, சாதுர்ய புத்தி உள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்தத் திறமையும் சாதுர்யமும் நம் அமைச்சர் மாண்புமிகு ரகுபதி அவர்களிடம் உள்ளது.

— கவிஞர் சிவல்புரி சிங்காரம்

(கோவையில், கோவை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 28-8-92 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்)



நெற்குப்பை திரு. இராம. விசுவநாதன் செட்டியாரின் புதல்வன் செல்வன் சொக்கலிங்கத்திற்கும் மேற்படி ஊர் திரு. பெரி. தெ. சுந்தரம் செட்டியாரின் புதல்வி செல்வி தெய்வானை என்கிற சாந்திக்கும் 31-8-92 அன்று நெற்குப்பையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமண விழாவில் நீதி நூல்களின் தொகுப்பான "ஏழிளந்தமிழ்" என்ற பயனுள்ள நூல் அனைவருக்கும் வழங்கப் பெற்றது.

தேவகோட்டை கந்தர் சஷ்டி விழா

தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாவின் 47 ஆவது ஆண்டு நிகழ்ச்சிகள் 25-10-92 தீபாவளித் திருநாளன்று தொடங்கி 2-11-92 முடிய 9 நாட்கள் நடைபெற உள்ளன.

இவ்வாண்டுக்கு கந்தர் சஷ்டி விழாவின் தலைவராகப் பேராசிரியர் திரு. கண. சிற்சபேசனும் செயலாளர்களாக 'பழம் நீ' திரு. லெ.மு.மு. முத்துமாணிக்கம் திரு. சுப. அருணசலம் ஆகிய இருவரும் பொருளாளராக திரு. எஸ். எல். சேவுகஞ் செட்டியும் பொறுப் பேற்றிருக்கிருர்கள்.

விழாவில் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களும் தமிழக அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களும் பங்கு பெறுவார்கள்

பாதரக்குடி நகரத்தார் அற நிலை

நம் மூன்னோர்களால் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு பாதரக்குடியில் கட்டப்பெற்ற மடாலயம் இப்போது சீர் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. அதைச் சீர் செய்யவும் அதன் வளர்ச்சிக்காகவும் 'பாதரக்குடி நகரத்தார் டிரஸ்ட்' என்ற பெயரில் ஒரு அற நிலை 11-9-92 அன்று பதிவு செய்யப் பெற்றுள்ளது.

இந்த அறநிலையின் தலைவராக நமது இதழின் ஆசிரியர் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியாரும் செயலராக தேவகோட்டை திரு. அழ. அரு. சோம. நாராயணன் செட்டியாரும் பொருளாளராக திரு. எம். சிஎன். மாணிக்கமும் மற்றும் அறங்காவலர்களாக எட்டுப் பேரும் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

ஆசிரியருக்குக் கடிதம்

காரைக்குடியில் முன்னாள் நகர் மன்றத் தலைவர் திரு. சித. சிதம்பரம் அவர்களின் பெரும் முயற்சியால் தி. மு. க., ஆட்சியில் இருந்த காலத்தில் காரைக்குடியில் கவியரசர் கண்ணதாசன் நினைவாக ஒரு மண்டபம் கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. (இப்போதைய புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரே) சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகியும் கட்டி முடிக்கப் பெற்ற அதனைத் திறந்து வைக்க இப்போதைய தமிழக அரசு எந்த முயற்சியும் மேற்கொள்ளாதது மிகவும் வேதனையை அளிக்கிறது. எனவே இனியும் தாமதம் செய்யாது அம்மண்டபத்தைத் திறந்து வைக்க அரசு ஆவன செய்ய வேண்டியது அவசியமாகும்.

இராம. வ. இராமசாமி
கோட்டையூர்.

மணி விழா

தேவகோட்டை திரு. ராம. லெட்சுமணன்செட்டியார் (இராஜபாளையம் ராமசாமிராஜா பாலிடெக்னிக் முதல்வர்) திருமதி லெட்சுமி ஆச்சியின் மணி விழா 5-9-92 அன்று சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது இராமேஸ்வரம் - காசி பாத யாத்திரை அமைப்பின் அமைப்பாளர் 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோம சுந்தரன் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர். காசிஸ்ரீ திரு. ஆர் வயிரவன் பூமாலை சூட்டி வாழ்த்தினர்.

அமராவதிபுதூரில் குடநீராட்டு விழா

அமராவதிபுதூர் மகாத்மா காந்தியடிகள் பாதம் பதித்த புனித பூமி. தேசபக்தர் பிச்சப்பா சுப்பிரமணியம், தமிழ்க் கடல் இராய. சொ., சீர்திருத்தவாதி சொ. முருகப்பா, வயிநாகரம் குடும்பத்தார் வாழ்ந்த தலம் ஆகும். கவியரசர் கண்ணதாசன் கல்வி கற்ற குருகுலம் அமைந்துள்ள புகழ்மிக்க ஊராகும்.

அங்கு அமைந்துள்ள அருள்மிகு பாலகணபதி, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் சிவாலயத்தில் திருக்குட நன்னீராட்டு விழா 3-9-92 அன்று சிறப்பாக நிகழ்ந்தது. 31-8-92 முதல் 3-9-92 வரை ஆறுகாலம் யாகசாலைப் பூஜைகளும் கலை, இலக்கிய, இன்னிசை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிகழ்ந்தன.

கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணி, மற்றும் குடநீராட்டு நடைபெற்றுள்ளது. பத்தூர் நகரத்தாரின் திருப்பணியான இதில் அமராவதி புதூரைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. வெங்கா அவர்கள் (மலாக்கா சால்ட் ஆபீஸ்) பெரும் பங்கெடுத்து செயலாற்றினர்கள்.

திருமணம்

காரைக்குடி திரு. வீர. முத்துக்கருப்ப செட்டியார் புதல்வன் செல்வன் அழகப்பனுக்கும் சண்முகநாதபுரம் திரு.எஸ்.பிஎல். சாத்தப்ப செட்டியார் புதல்வி செல்வி வள்ளி மீனு என்கிற கீதாவிற்கும் 30-8-92 அன்று சண்முகநாதபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வேகுப்பட்டி ஆ. வ. இராமநாதன் செட்டியார் இயற்கை எய்தினர்

வேகுப்பட்டியைச் சேர்ந்த திரு. ஆ. வ. இராமநாதன் செட்டியார் 26-8-92 அன்று தமது 75 ஆவது வயதில் இயற்கை எய்தினர். இவர் தமிழில் முதுகலைப் பட்டம் (எம். ஏ.) பெற்றவர். பேராசிரியர் திரு. க. அன்பழகன், அமைச்சர், நாவலர், திரு. இரா. நெடுஞ்செழியன் போன்றவர்கள் அண்ணாமலைப் பல்கலையில் இவருடன் பயின்றவர்கள்.

பெருந்தலைவர் காமராசர், கம்பன் அடிப்பொடி சா. கணேசன், இராம. சீனிவாசன் ஆகியோருடன் அரசியலில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

புதுக்கோட்டை சமஸ்தான போராட்ட வீரர் குழுவில் காங்கிரசில் சேர்ந்து பொறுப்பாட்சிப் போராட்டத்தில் பங்கேற்றவர்.

வேகுப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராக இருந்து பல நற் தொண்டுகள் ஆற்றியவர். மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் சில ஆண்டுகள் முதல்வராகப் பணியாற்றினர்கள். அப்போது பண்டிதமணி போன்ற சான்றோர்களின் நட்பு ஏற்பட்டது.

''தமிழர் செல்வம்'' என்ற நூலைச் சங்க இலக்கியச் சான்றுகளுடன் இயற்றி வெளியிட்டார். அந்நூல் கல்லூரிகளில் பட்டப் படிப்பிற்குத் துணைப் பாட நூலாக வைக்கப் பெற்றுள்ளது.

திண்டுக்கல் நகரத்தார் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் செயலாளராகச் சேவை செய்தார்கள்.

'ஏ.வி. ஆர்' என அனைவராலும் அன்புடன் அழைக்கப் பெற்ற அவர்களது இழப்பு ஈடு செய்ய முடியாததாகும்.

தகவல்: தமிழ் மன்றம்,
வேகுப்பட்டி

இயற்கை எய்தினர்


அலவாக்கோட்டையைச் சேர்ந்த பழ. நாக. நாகப்ப செட்டியார் அவர்கள் தமது 76ஆவது வயதில் 4-9-92 அன்று இயற்கை எய்தினர்கள்.

கோவையில் தொழில் செய்து வந்த இவர்கள், கோயம்புத்தூர் நகரத்தார் சங்கத்தின் தலைவராகவும் அலவாக் கோட்டை அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேசுவரர் திருக்கோவிலின் திருக்குட நீராட்டுக் குழுவின் நிர்வாகச் செயலாளர் மற்றும் பொருளாளராகவும் இருந்து சேவை செய்தவர்கள். தெய்வ பக்தி மிக்க இவர்கள் பிறருக்கு உதவும் நல்ல மனம் படைத்தவர்கள்.

ஃ கடவுள் பூமியைப் படைத்ததன் நோக்கமே ஒரு கலகத்தை உண்டாக்குவதற்குத்தான் என்று எனக்குத் தோன்றுகிறது. இல்லையென்றால் ஆண், பெண் என்ற இரண்டு வர்க்கத்தை ஏன் படைக்கிருன்?

— கவியரசர் கண்ணதாசன்

காலமானார்



ஒக்கூர் சிக. கரு. கண. இராமநாதன் செட்டியார்
என்ற குருசாமி செட்டியார்

அவர்கள் 17—9—92ம் தேதி வியாழக்கிழமை இரவு 9-50 மணிக்கு மதுரையில் இயற்கை எய்திவிட்டார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

RM. வள்ளியம்மை ஆச்சி (மனைவி)
RM. கண்ணப்பன் என்ற ரெத்தினம் (மகன்)
KN. கண்ணாத்தாள் (மருமகள்)
Lns. சரோஜா நாச்சியப்பா (மகள்)
Ln. CN. நாச்சியப்பா (மாப்பிள்ளை)

மற்றும் பேரன், பேத்திமார்கள்

SK. KR. KN. ராமநாதன் செட்டியார் & Co.,
கெஜலெட்சுமி & Co.,
ஸ்ரீ லெட்சுமி & Co.,
ஸ்ரீ லெட்சுமி டிராவல்ஸ்
36, பந்தடி 3வது தெரு, மதுரை-1

செப்பு மொழிகள்

ஃ புகழ் பெருகுவது - பதவி வருவதற்காக. பதவி வருவது - புகழ் போவதற்காக.

ஃ பணத்தைச் சம்பாதிப்பதற்கு புத்தி வேண்டும். அதை ஒழுங்காகச் சேர்த்து வைப்பதற்கொரு புத்தி வேண்டும். சேர்த்ததை நியாயமாகச் செலவழிப்பதற்கொரு புத்தி வேண்டும். இந்த மூன்று புத்தியும் ஒரே இடத்தில் இருக்க வேண்டுமென்றால் தலையெழுத்து நன்றாக இருக்க வேண்டும்.

ஃ மலர்களை எல்லோரும் விரும்புகிறார்கள். அதனால் தான் அவை சீக்கிரம் கருகிப் போகின்றன. மரங்களை எல்லோரும் விரும்புவதில்லை. எனவேதான் அவை நீண்ட காலம் வாழ்கின்றன. அதிகம் ஆசை வைக்கும் பொருளில் தான் சீக்கிரம் வெறுப்புத் தோன்றுகிறது.

ஃ தாய்ப்பால் கொடுக்காத குழந்தைக்குத் தாய்ப் பாசம் இருக்காது. தமிழ் படிக்காத தமிழ் நாட்டுக் குழந்தைக்கு எப்படித் தாய் நாட்டுப் பற்றிருக்க முடியும்?

— கவியரசர் கண்ணதாசன்

திருத்தம்

இவ்விதழில் 25 ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள திரு. இராம. முத்துப்பழநியப்ப செட்டியாரைப் பற்றிய கட்டுரையில் 10 ஆவது வரியில் 'சக்தியாகும்' என அச்சாகி இருப்பதை 'சக்கந்தியாகும்' எனத் திருத்தி வாசிக்க வேண்டுகிறோம்.

நூல் மதிப்புரை

அபிராமி அந்தாதி ஆராய்ச்சி

''ஒன்றும் அரும்பிப் பல வாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் நின்ற'' திருக்கடவூர் அபிராமி அன்னையின் திருவடிகளில் மற்றொரு மலர் மலர்ந்து மணம் பரப்புகிறது. தனந்தரும் கல்வி தரும் தனைப்பற்றி ஆராயத் தமிழ்தரும் என்று போற்றத்தக்க அன்னையின் அருள் இந்த நூலில் நிறைந்திருக்கிறது அருள் பெற்றுப் பாடிய அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதியை ஆராய்ந்து இந்நூலை எழுதும் பேறு செந்தமிழும் சிவநெறியும் சிறக்க வாழும் செட்டி நாட்டரசர் குடும்பத்தில் தோன்றிய பெருந் தொழிலதிபர் திரு. A. C. முத்தையா அவர்களின் இல்லத்தரசியார் திருமதி தேவகி முத்தையா அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ் வளர்க்கும் தருமபுர ஆதீனம் 26 ஆவது குருமகா சன்னிதானம் அவர்களின் அருளாசியுடன் ஞான சம்பந்தம் பதிப்பகத்தின் மூலம் வெளியிடப் பெற்ற இந்நூல் ஆசிரியருக்கு எம்ஃபில் பட்டத்தை வாங்கிக் கொடுத்திருந்தாலும், நூலைப் படிக்கும்பொழுது, பட்டத்திற்காக எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. பக்தி மணக்கும் பண்புடைய சான்றோரின் இதயத்தில் பூத்த எழில் மலராகத் தோன்றுகிறது.

அனுபவ உரை என்ற பகுதியிலேயே நூலாசிரியரின் பணிவும் பெருமையும் பக்தியும் வெளிப்படுகின்றன. தில்லைக்கூத்தன் திருவடி திருவாசகம் இருந்த இடம். தானெழுதிய திருவாசகத்தைத் தன் திருவடியில் வைத்து உலகுக்குக் காட்டிய நடராஜப் பெருமான் இந்த அபிராமி அந்தாதி ஆராய்ச்சி நூலை, அதே திருவடிக் கீழ் வைத்து இந்நூலுக்குக் காஞ்சி காமகோடிப் பெரியவர் ஜெயேந்திர சுவாமிகள் திருக்காங்களால் வைரமுடி சூட்டி மகிழ்ந்தான் என்றால் நூலாசிரியை திருமதி தேவகி முத்தையா அவர்களை ''இப்பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவாமே காத்தி''ருக்கிறான் என்பது வெளிப்படவில்லையா?

நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்ற இந்நூல், அந்தாதியின் அமைப்பும் சிறப்பும், சமயக் கூறுகள், இலக்கியக் கூறுகள், அபிராமி அந்தாதியும் ஏனைய



தேவகி முத்தையா

சமய இலக்கியங்களும் என்று மூல நூலை ஆராய்கிறது.

சக்திக்கே உரிய நூல் என்றும் சாக்தம் பற்றிய நூல் என்றும் பலரும் நினைக்கும் அபிராமி அந்தாதி, சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் பற்றிப் பேசுகிறது என்றும் சொல்லும் பொருளுமாகச் சிவத்தையும் சக்தியையும் சேர்த்தே கூறுகிறது என்றும் இந்த ஆராய்ச்சி நூல் முடிவு கட்டுகிறது.

பராசக்தியைக் கறைக்கண்டனுக்கு மூத்தவளே என்று அழைக்கிறார் அபிராமி பட்டர். அவள்

தான் சிவனருள். அவள்தான் சிவனுக்கு உருவம் தந்தவள். எனவே அவனுக்கு மூத்தவள். சக்தி சிவத்தை ஈன்றது. சிவம் சக்தியை ஈன்றது. இதைக் குறிக்கும்பொழுது ''இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்'' ''என்னும் திருவாசகத்தை எடுத்துக் காட்டுவது நூலாசிரியரின் சமயநூல் பயிற்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

''திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி'' இந்நூலில் தெய்வீக மணம் பரப்புகிறது. பெரும்பாலும் அறிஞர் பெருமக்கள் எடுத்து ஆளாத காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதிப் பாடல்கள் நூலுக்கு அணி செய்யுமாறு சுட்டிக் காட்டப் பெற்றிருக்கின்றன.

பாராயணம் செய்யத்தக்கவாறு, அபிராமி அந்தாதி நூல் முழுவதும் பின் இணைப்பாகத் தரப் பெற்றுள்ளது. தாயே அதிகம் தயையுடையாள் என்பதால் தந்தையை விடத் தாயான அம்மையை பட்டர் அதிகம் போற்றுகிறார் என்பது தருமையாதீனம் குருமகா சன்னிதானம் அவர்களின் அருளுரை. இது நேர்காணலாக ஆய்வுக்குரிய வகையில் அமைந்துள்ளது.

''மாயா முனிவர்'' என்பது மார்க்கண்டேயரைக் குறிக்கிறது என்றும் தில்லைக் கணபதிக்குக் காப்புப் பாடுவதால் சிவனுக்கு முதன்மையான தில்லைக் கோயில் சிறப்பிக்கப்படுகிறது என்றும் நூலாசிரியர் குறிப்பிடுவது சிறப்பாக உள்ளது.

செட்டி நாட்டரசர் குடும்பம் தில்லையில் திருப்பணி செய்த குடும்பம். இன்றும் அறக்கட்டளை வைத்துள்ள குடும்பம். கற்கோயில் கட்டுவதோடு சொற்கோயிலும் கட்டும் திறமையை நடராசமூர்த்தி இக்குடும்பத்தில் விளக்கேற்றவந்த திருமதி தேவகி

முத்தையா அவர்களுக்குத் தந்து, தடுத்தாட் கொண்டிருக்கிருர் என்பது இந்த ஆராய்ச்சி நூலின் ஒவ்வொரு சொல்லிலும் வெளிப்படுகிறது. ஆசிரியரின் அடுத்த நூலான காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி ஆராய்ச்சியை அறிஞருலகம் ஆவலுடன் எதிர் நோக்க, இந்த நூல் வகை செய்கிறது. தனந்தரும், கல்வி தரும் என்றபடி இந்தக் குடும்பத்தாருக்கு இரண்டையும் தந்த அபிராமவல்லியை வணங்கி ஆசிரியரைப் பாராட்டுவதோடு, இத்தகைய நூலைப் படிக்கும் தவம் செய்துள்ள பல்லாயிரக் கணக்கான வாசகர்களையும் பக்தர்களையும் பாராட்டி வணங்குகிரும்.

நூல் கிடைக்கும் இடம் :

திருமதி தேவகி முத்தையா
எம்.ஏ., எம் ஃபில்

அடையாறு இல்லம்,
கோட்டூர் புரம்
சென்னை-600 085.


விலை ரூபாய் 18-00

— சொ. சொ. மீ. சுந்தரம்
எம். காம்.

வாழ்த்து

கண்ணுதற் கடவுளை நஞ்சிலே காத்தவள்
கருணைவடி வானதேவி
காலனை வீழ்த்தியே மார்க்கண்ட தேவனைக்
காக்கும் அபிராமியன்னை
மண்ணிலே அபிராமி பட்டருக் காகவே
மதியினை வரவழைத்த
மாதேவி சென்னையில் தேவகிமுத்தையா
மனத்திலே கோயில்கொண்டாள்
எண்ணரிய அபிராமி அந்தாதி ஆராய்ச்சி
ஏற்றமுற வேகொடுத்தாள்.
எம்பிரான் தில்லையில் வைரமுடி சூடவே
இவள்கவிதை முடிசூடினுள்
பெண்ணரசி அபிராமி அண்ணு மலைமரபிள்
பெருந்தமிழ் விளங்கவைத்தாள்
பேசரும் இந்தநூல் தேவகி முத்தையா
பெருங்குணம் போல வாழ்க !

— சொ. சொ. மீ. சுந்தரம்



காரைக்குடி திரு. நா. சித. ராம. அழ. மகாதேவன் செட்டியார் புதல்வன் செல்வன் அழகப்பனுக்கும் நேமத்தான்பட்டி திரு. யீ. சா. வீர. பழ. அ. பழநியப்ப செட்டியார் புதல்வி செல்வி வள்ளியம்மைக்கும் பள்ளத்தூர் அள. கா. படைப்பு வீட்டில் 14-9-92 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமதி இந்திராகாந்தி என்னை எந்த இடத்தில் பார்த்தாலும் 'Hallow Poet' என அழைப்பார்கள். அப்பொழுது நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

— கவியரசர் கண்ணதாசன்

கண்ணதாசன் கூறியவை :

நான் வாழ்க்கையில் எல்லா வற்றையும் அனுபவித்தவன். Action Period முடிந்து விட்டது. இப்பொழுது Reaction Period நடக்கிறது.

பூர்வ ஜென்மம் என்பதில் நம்பிக்கை இல்லாதவர்கள். பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போய் அன்று பிறந்த குழந்தைகளைப் பார்க்க வேண்டும். பத்துக் குழந்தைகள் பிறந்தால் அதில் ஒன்று சிவப்பு, ஒன்று கருப்பு, ஒன்று பழுப்பு, ஒன்று குண்டு, ஒன்று ஒல்லி, ஒன்று சவலை, ஒன்று அங்கஹீனம் இப்படி விதம் விதமாக இருக்கும் இவைகளை இறைவன் இப்படிப் படைக்கக் காரணம் பூர்வ ஜென்ம பலனாக இல்லாமல் வேறு எதாக இருக்க முடியும்? இதை நான் சொல்லவில்லை காஞ்சிப் பெரியவரே ஒரு தடவை சொல்லியிருக்கிறார்.

புதுச்சேரியில் பாரதியார் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு பெரியவர் இருந்தார். 90 வயதுக்கு மேல் இருக்கும். பாரதியாரைப் பற்றி அவருக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்து அவரைக் கேட்ட போது, ''அய்யரைப் பார்த்து இருக்கிறேன். இப்படி அவருக்கு இவ்வளவு பெயரும் புகழும் வரும் என்று தெரிந்திருந்தால் அவருடன் நெருங்கிப் பழகி இருப்பேன்'' என்றார்.

நான் சிறுவனாக இருந்த போது ஊசி போட்டுக் கொள்கிறேன் என்று ஆங்கிலத்தில் சொல்ல ஆசைப்பட்டு Pin போட்டுக்கொள்ளப் போகிறேன் அல்லது Needle என்று சொல்வேன். Injection என்பது வெகு நாள் கழித்துத்தான் தெரியும்.

இன்னம் சிலர் தமக்குத் தெரியாவிட்டாலும் விடாப்பிடியாக தப்புத் தப்பாக ஆங்கிலம் பேசுவதைப் பார்த்திருக்கிறேன். பலருக்கு ஸ்பீக்கருக்கும், மைக்குக்கும் வித்தியாசம் தெரியாது. ஸ்பீக்கரைக் காட்டி 'மைக்' சரியில்லை, என்பார்கள்.

எனக்கு வேதம், சாஸ்திரம். உபநிஷத் எல்லாம் தெரியும் என்று நினைக்கிறார்கள். அது



தவறு. தெரிந்தது கம்மி. அதில் சர்க்கஸ் செய்கிறேன். அவ்வப்போது படித்துவிட்டு எழுதுகிறேன்.

நான் கவிதை எழுதத் தேர்ந்தெடுக்கும் நேரம் காலை 10–30 முதல் 1 மணி வரை. மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை.

நான் சங்கீதம் கற்றுக் கொள்ள முயன்றேன். முயன்றும் முடியாமல் போனது என்னைப் பொறுத்தவரை சங்கீதம்.

தமிழ் மொழிச் சீர்திருத்தம் அனாவசியம். இப்போது உள்ளதே சரியாகத்தான் இருக்கிறது.


'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் ...

கவியரசர் பற்றி சில செய்திகள் !

ஃ கவிஞர் கண்ணதாசன் எழுதிய 'அழகி' என்ற கவிதை 14 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஃ கண்ணதாசனின் குட்டிக் கதைகள் என்ற நூல், கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, கன்னடப் பல்கலைக் கழகத்தில் ஒரு பாட நூலாக வைக்கப்பட்டுள்ளது.

ஃ கவியரசர் கண்ணதாசனுக்கு 'நல்லான் செட்டியார்' என்று ஒரு பெயருண்டு. இப்பெயர் கவிஞரின் தாத்தா பெயராக இருந்ததால், 'முத்து' என்றே பெற்ருேர்கள் அழைத்



தார்கள். ''கண்ணதாசன்'' என்ற பெயர் அவர் தனக்குத் தானே வைத்துக்கொண்ட பெயராகும்.

ஃ கண்ணதாசனுக்கு இலக்கியத்தில் ''டாக்டர்'' பட்டம் கொடுக்க மதுரை காமராசர் பல்கலைக் கழகம் எடுத்த தீர்மானத்தை கவிஞருக்கு அறிவிக்கு முன்ஞல் அவர் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

ஃ கவியரசர் ''பராசக்தி'' ''கறுப்புபணம்'' ''ரத்ததிலகம்'' ''சூரியகாந்தி'' ஆகிய படங்களில் நடித்திருக்கிருர்.

ஃ வணங்காமுடி, அளசா, கமகப்பிரியா, பார்வதிநாதன், காரை முத்துப்புலவர் என்ற புனைப் பெயர்கள் கவியரசருக்கு உண்டு.

ஃ 100 கவிதைகள் அடங்கிய 'அம்பிகை அழகு தரிசனம்' என்ற நூலை கவிஞர் 4மணி நேரத்தில் எழுதி முடித்தார். மிகக் குறைந்த நேரத்தில் அவர் எழுதிய நூல் இதுவே.

ஃ கவிஞர் கண்ணதாசனின் முதல் புத்தகம் - 'ஈழத்து ராணி'

ஃ தேவர் பிலிம்ஸ், தண்டாயுதபாணி பிலிம்ஸ் ஆகியவை தயாரித்த 60 படங்களில் 48 படங்களுக்கு பாடல் எழுதியவர் கவியரசர் கண்ணதாசன்.

ஃ மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நடித்த 'தாய்க்குப் பின் தாரம்' படத்தை சின்னப்பா தேவர் தயாரித்த போது அதைத் தொடங்கி வைத்தவரே கவியரசர் தான்.

அறிஞர் அண்ணு பற்றி

கண்ணதாசன்

''அழகுமொழி இழைக்கருத்து
தெளிவாய்ச் சொன்னார்;
அதனாலே அவர்
அறிஞர் அண்ணாவானார்;
குத்துங்கால் நறுக்கென்னும்
ஊசி; ஆனால்
கோணியிலே பாய்கின்ற
ஊசியல்ல!
வெத்தூசி அல்லவடா !
நோயைத் தீர்க்கும்!
மெல்லியதோர் வைத்தியன்
கை ஊசியாகும்.''

எழுத்தாளர்கள், வாசகர்களுக்கு . . . .

கண்ணதாசன் நினைவு இதழுக்கு ஏராளமான செய்திகள், கவிதைகள், கட்டுரைகள் வந்து எம்மைத் திக்குமுக்காட வைத்து விட்டன. அனைத்தையும் இந்த நினைவு இதழில் வெளியிட இயலவில்லை. எனவே எஞ்சியவை அடுத்த இதழில் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்
''நகரத்தார் குரல்''

குரோம்பேட்டை நகரத்தார் சங்கம்

சென்னை குரோம்பேட்டை நகரத்தார் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 19-7-92 அன்று குரோம் பேட்டை ஐயா சாமி ஐயர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. அப்போது புதிய ஆண்டுக்கு திரு. சுப. சிதம்பரம் செட்டியார் தலைவராகவும் திரு. பழ. சுப்பிரமணியன் செட்டியார் துணைத் தலைவராகவும் திரு. சுப. மெய்யப்ப செட்டியார் செயலாள ராகவும் திரு. எஸ். எஸ்பி. சாத் தப்பன் திரு ஏ. சொக்கலிங்கம் ஆகிய இருவரும் துணைச் செய லாளர்களாகவும் திரு. எஸ். கண்ணப்பன் பொருளாளராகவும் தேர்வு செய்யப் பெற்றனர். கூட்டத்தில் தணிக்கை செய்யப் பெற்ற கணக்கும் ஆண்டறிக் கையும் படிக்கப் பெற்றன. செய லாளர் திரு. சுப. மெய்யப்ப செட்டியார் நன்றி கூறினர்.

திருமணம்

கடியாபட்டி விஸ்வநாதபுரம் திரு. பி. கு. நா. கும. வயி. கும ரப்ப செட்டியார் பேத்தியும் திரு. பெரியகருப்பன் புதல்வியுமான செல்வி விசாலாட்சிக்கும் கொப் பனுபட்டி திரு. மு. ப. மு. பெரிய கருப்பன் செட்டியார் பேரனும் திரு. பழநியப்ப செட்டியார் புதல் வனுமான செல்வன் மயிலழகு என்கிற பழநியப்பனுக்கும் 9-9-92 அன்று விஸ்வநாதபுரத் தில் திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது.

இருபதாம் நூற்றாண்டு மாலோ?

'மக்கள் கவிஞர்' அரு. நாகப்பன்

(இசைப் பாடல்)

கலியுகத்துக் காளமேகம் பாரடி — அவன்
கவியமுதம் தமிழர்க்குச் சீரடி
கலையுலகம் கண்டெடுத்த பாவடி — அவன்
கள்ளமிலா மனத்தாலே பூவடி

செட்டிமக்கள் குலத்துதித்த தேனடி — அவன்
செந்தமிழைக் கொட்டுவதில் வானடி
கட்டழகின் கவிதுள்ளும் மானடி — கண்ணன்
தாசனுக்கு இணையிங்கே யாரடி?

எட்டாவது பிள்ளையவன் கண்ணன் — இவன்
எட்டுதற்குக் கீதைதந்த மன்னன்
எட்டாவது பிள்ளைகண்ண தாசன்
இப்பொருத்தம் பெற்ருன் நம்நேசன்

கண்ணன்போல் தோன்றி வந்த தாலோ! — இவன்
கண்ணதாசன் ஆகிவந்த பாலோ?
எண்ணமெலாம் கூரறிவு வேலோ — இவன்
இருபதாம் நூற்ருண்டு மாலோ?
திருமாலோ

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணுபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு நடராஜ் அண்ணுமலே அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்

ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம்:	நிர்வாக அலுவலகம்:
திருநெல்வேலி-627006	பள்ளத்தூர்-623107
தொலைபேசி: 23474	தொலைபேசி: 72 & 108

மத்திய அலுவலகம் : சென்னை-600 002

தொலைபேசி: 869344 & 867886

தென்னகத்தில் மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான
ஒப்பற்ற சீட்டு நிறுவனம்

3 மாநிலங்கள் 60 அலுவலகங்கள் 45 ஆண்டு சேவை

நிதி நிலைமை 31-3-1992ல் உள்ளபடி
(தணிக்கை செய்யப் பெற்றது)

அதிகாரம் பெற்ற மூலதனம்	:	ரூ. 25.00 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனமும்		
ரிசர்வ் நிதியும்	:	ரூ. 36.34 லட்சம்
ஆஸ்திகள்	:	ரூ. 30.19 கோடிக்கு மேல்
சீட்டு நடைமுறை நிதி	:	ரூ. 34.14 கோடிக்கு மேல்

டைரக்டர்கள் : **AR.** விஸ்வநாதன்
V. சுவாமிநாதன்

எங்கள் 60 அலுவலகங்கள் மூலமாக பல்வேறு மதிப்புள்ள மாதம் ஒருமுறை, இருமுறை சீட்டுக்கள் ரூ. 50,000/-வரை நடத்தி வருகின்றோம். மேலும் மாதம் ஒருமுறை ரூ. 50,000/- முதல் ரூ.3,00,000/-வரை மதிப்புள்ள சீட்டுக்களை பிராந்திய குரூப்புக்களாக எங்கள் சென்னை மத்திய அலுவலகம், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, காரைக்குடி, பாண்டிச்சேரி கிளைகளிலும் ரூ. 5,00,000/- உயர் மதிப்புள்ள சீட்டை சென்னை மத்திய அலுவலகத்திலும் நடத்தி வருகின்றோம்.

Dr. L. RM. அருணாசலம் B. E., M. E., (PH) M. I. E.
பொது ஜனத் தொடர்பு அதிகாரி

AR. பழநியப்பன்
நிர்வாக அதிகாரி

RM. அருணாசலம்
நிர்வாக இயக்குநர்

Regd. No. TN / MA / (C) / 106 NAGARATHAR KURAL



அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள் !

பட்டுச் சேலைகள் &
பாவாடைகள்

அனைத்து மில் பாலிஸ்டர்
வாயல் &

காட்டன் சேலைகள்,

சர்ட்டிங்ஸ் & சூட்டிங்ஸ்

ரகங்களுக்கு

ஸ்ரீ சிவலிங்கம் சில்க்ஸ்

15, அம்மன் சன்னதி,

மதுரை - 625 001.

போன் : 33229